விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது


Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (15.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 13ஆவது அரசியல் அமைப்பின்படி தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு

## வழங்கக் கோருகிறார் ரணில் விக்கிரமசிங்க



(புதுடில்லி)

13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த அதிகாரப்பகிர்வு இலங்கையில் வழங்கப்படவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்துகிறார். இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைக் கட்டியெழுப்பும் சவால்களுக்கு தயாராகுங்கள்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு

(கொழும்பு)

வல்லரசு நாடுகளின் அழுத்தங்கள் இல்லாது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் சவாலுக்கு அனைவரும் தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

தங்காலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மக்கள் வங்கி கிளையினை திறந்து வைத்து. உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பெற்றுக்கொண்ட சுதந்திரத்தினை பாதுகாத்துக் கொள்வதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

இந்த நிலையில் மக்களின தேவைகளைப் புரிந்து கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், பொருளாதார வளர்ச்சியினை விரைவில் அடைய முடியும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

சர்வதேசத்துக்கு அஞ்சி நாட்டினை கூறு போட முடியாது. சர்வதேச வல்லரசுகளின் அழுத்தங்களுக்கு நாம் பணிந்து போக முடியாது என அவர் கூறினார். (எ-1)

## ஒரே வீட்டில் ஒரே இரவில் இரண்டு சகோதரிகள் தற்கொலை

### யாழ்ப்பாணத்தில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு வீட்டில் இரண்டு சகோதரிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவத்தால் யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் பலாலி வீதியில் ஆரியகுளத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 7.30 மற்றும் 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியையான சங்கரப்பிள்ளை சுவர்ணலதா (வயது-43), யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய ஆங்கில ஆசிரியையான சங்கரப்பிள்ளை கீதாஞ்சலி (வயது-40) ஆகிய சகோதரிகளே உயிரிழந்தவர்களாவர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்!


(கொழும்பு)

வளிமண்டலத்தில் ஏற்பட்ட திடீர் குழப்ப நிலை காரணமாக, நாட்டின் பல பாகங்களில் அடிக்கடி இடியுடன் கூடிய மழையும், பலமான காற்றும் வீசும் என வானிலை அவதான நிலையம் மீண்டும் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் பல பகுதிகளிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடியுடன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர ரீதியில் விரிசல்; சமாளிக்க பசில் இந்தியா பயணம்!



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கடந்த கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்ட விரிசலைத் தொடர்ந்தே, இவரின் புதுடில்லிக்கான விஜயம் அமையவுள்ளது.

இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கைக்கான விஜயத்தைத் தொடர்ந்து இம்மாத இறுதியில் தான் புதுடில்லிக்குச் செல்லவுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை திருப்பி அனுப்புவதை ஐரோப்பிய நாடுகள் இடைநிறுத்தின!

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை திருப்பி அனுப்புவதை அந்நாடுகள் ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் இலங்கை ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்தே, இத்தகையதொரு முடிபை ஐரோப்பிய நாடுகள் எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிப்பதில் சிக்கல் நிலை

(கொழும்பு)

கொழும்பு-தூத்துக்குடிக்கு இடையிலான கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு-தூத்துக்குடிக்கு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்டது. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்தக் கப்பல் போக்குவரத்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் கொழும்பு-தூத்துக் குடிக்கு இடையே சிறிய பயணிகள் கப்பல் எதிர்வரும் 19 ஆம் திகதி இயக்கப்படும் என தூத்துக்குடி துறைமுக

(20ஆம் பக்கம் பார்க்க)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog | Sri Lanka Telecom | airtel | etisalat | Sri Lanka Telecom Mobitel We Care, Always. | (CEB) | WESTERN UNION MONEY TRANSFER | HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸ் சித்திரவதைக் கூடத்தில் லலித், குகன் ஆகியோர் தடுத்துவைப்பு



## லங்கா நியூஸ் வெப் தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கடத்தப்பட்ட மக்கள் போராட்ட அமைப்பின் செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக லங்கா நியூஸ் வெப் எனும் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் புறக்கோட்டை மன்னிங் சந்தைக்கு எதிரே அமைந்துள்ள புனர்வாழ்வு பிரிவு கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நம் பகரமாக தெரியவந்துள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் லங்கா நியூஸ் வெப் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொலிஸாரின் புனர்வாழ்வுப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்து, தற்போது ஓய்வு பெற்றுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொம்பலவிதானவின் பதவிக் காலத்தில் பொலிஸாரின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பல மில்லியன் ரூபாய் செலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இந்நிலையில் படைத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கடத்தப்படுவோரும், கைது செய்யப்படுவோருக்குமான சித்திரவதைக் கூடமாக இக்கட்டிடம் தற்போது மாற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடத்தின் கீழ்த் தளமும், 6-வது மாடியும் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

அரசினால் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள இக்கட்டத்துக்குள் குறிப்பிட்ட சில பொலிஸாருக்கு மட்டுமே உட்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் இயங்கும் சித்திரவதைக்கூடம் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய பெரேரா என்ற பொலிஸ் அதிகாரி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது.

பொலிஸ் சேவையில் ஒரு துணை அதிகாரியாகப் பதவி பெற்ற இவருக்கு படைத்துறைச் செயலாளரினால் 2 ஆண்டுகளில் நிரந்தர சேவை வழங்கப்பட்டு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் நிர்வாகத்துறை குறித்து அதிகம் அறிந்திராத இவர் படைத்துறைச் செயலாளரின் விசேட பிரிவில் முக்கிய உறுப்பினர் ஒருவராக செயற்பட்டு வருகின்றார். இலங்கையில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற ஆட்கடத்தல் சம்பவங்களுடன் இவருக்கு தொடர்புகள் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆந் திகதி கடத்தப்பட்ட லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் இக்கட்டடத்தின் 6 ஆவது மாடியில் உள்ள அறை ஒன்றில் இவரால் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ச்சியான விசாரணைக்கு உட்பட்டு வருகின்றனர்.

இவ்விருவரும் கொல்லப்பட்டுவிட்டதாக வெளியான செய்திகள் பிழையானவை. இவர்கள் இருவரும் பொலிஸாரின் புனர்வாழ்வுக் கட்டிடத்தின் 6-வது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இக்கட்டிடத்தின் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகேயுள்ள இரகசிய அறை ஒன்றில் வைத்தே முன்னிலை சோசலிஷக் கட்சியின் உறுப்பினர்களான பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரையும் அடையாளம் காட்டுமாறு லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளது.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமின் சித்திரவதைக்கூடத்திற்கு பிரேம்குமார் குணரட்ணம் பின்னர் கொண்டு செல்லப்பட்டார் என லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. 2010-ம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது லலித் குமார் வீரராஜ் தாக்கப்பட்டிருந்தார். அத்துடன் 2011-ம் ஆண்டின் ஆரம்பத்தில் இவர் படைத்தரப்பினரால் எதுவித காரணமும் இன்றி கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பாதிக்கப்பட்ட மக்களை எம்.எஸ்.எவ். கைவிடாது!

## தன்னார்வ தொண்டு நிறுவனம் அறிவிப்பு

இலங்கையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் சேவையை கைவிடவில்லை என எம்.எஸ்.எப். என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு வந்த எம்.எஸ்.எப். தொண்டு நிறுவனம் கடந்த 5ஆம் திகதி வடக்குக்கான தனது சேவையை இடைநிறுத்திக் கொண்டது.

எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகள் தேவைப்பட்வில்லை எனவும் நீண்டகால அடிப்படையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் எம்.எஸ்.எப். தெரிவித்துள்ளது. எனவே நீண்டகால அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலன்களை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்துக்குக் கிடையாது.

இதன் காரணமாகவே இதுவரை காலமும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்த உளநல ஆலோசனைச் சேவையை இடைநிறுத்தியதாகவும் இது யுத்த வலய பாதிக்கப்பட்ட மக்களை கைவிடுவதாக அர்த்தப்படாது.

யுத்தம் முடிபடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் ஆயிரக்கணக்கான மக்கள் உளசார் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை.

அவசரமாக உதவி தேவைப்படும் மற்றுமொரு பிரதேசத்திற்கு தமது வளங்களை பயன்படுத்த உத்தேசித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

# 24 மணித்தியாலங்களில் 30 நில அதிர்வுச் சம்பவங்கள்

அனைத்து புவி சிறுதட்டுக்களிலும் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக 24 மணித்தியாலங்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் 30 நில அதிர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நில அதிர்வுச் சம்பவங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியுடன் முடிபடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்றுள்ளன என்று மேற்படி புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் கூறியுள்ளது.

4 முதல் 6 ரிச்டர் அளவுகளுக்குள் பதிவாகியுள்ள மேற்படி நில அதிர்வுச் சம்பவங்களில் 15 சம்பவங்கள் சுமத்திராவுக்கு அருகிலான கடற்பரப்பில் இடம் பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட இந்தியாவில் 4.3 ரிச்டர் அளவிலும் சீனாவில் 4.5 ரிச்டர் அளவிலும் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் ஜப்பான் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் 4 நில அதிர்வுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)


பௌதிகவியல்/ இணைந்த கணிதம்
தமிழ் / ஆங்கிலம்

பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை பல ஆண்டுகள் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றிய ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் A/L வினாத்தாள் உட்பட கற்பிக்கப்படும். A/L 2014 தொடர்பு கொள்ளலாம்.

T.P: 0775178727

R. பாலசுப்பிரமணியம் B.Sc(Cey), Dip.in.Ed.
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி (கேணியடி), யாழ்ப்பாணம்.

(8176)



ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்]

NORTH LEAD

328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460



சிங்கள வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

NORTH LEAD

328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம்-சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460



வீடு விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைக்கு போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 1/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0114949234

(8113)



கண்ணீர் அஞ்சலி

தி. இரத்தினசபாபதி

காரைநகர் வடக்கு, மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்புரிமையாளர் சபை செயற்குழு உறுப்பினராக 35 ஆண்டுகள் இருந்து தொண்டாற்றிய

தி. இரத்தினசபாபதி

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு துயரடைந்திருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் சகோதரங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் நல்லருள் புரிவாராக.

மருதடி, காரைநகர். (C-6383) - பொறுப்புரிமையாளர் சபை



4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1916 03 22
ஆண்டவன் அடியில் 2008 04 30

அமரர்
இராமலிங்கம் பொன்னுத்துரை
(மண்டைதீவு 06)

திதி : தசமி

'அவனி விட்டு நீங்கள் சென்று ஆண்டு நான்கு வந்ததையா
ஆறாது எமது துயர் ஆறாது என்றும் ஐயா
நான்கு ஆண்டென்ன நானிலத்தில் நாம்
வாழும்வரை உங்கள் நினைவே எம் நெஞ்சில்
எம் அன்பான ஐயாவே! உங்கள் ஆத்மா
சாந்திபெற இறைவனை நாம் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்

50 சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம்.

(8177)



கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு
கணனிகள் திருத்துதல்

Processor, Motherboard, Hard disk, Ram DDR- I, II, III, DVD Writer, Casing, LED Monitor, Keyboard, Laser Mouse, Headphone, Pen Drive, 7.2 Multy Dongle, Web camera, Speaker, etc, (கணனி தொடர்பான அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்).

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) Monitor (LCD & CRT), UPS, Printer மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

NORTH LEAD Computer Sales and Service Center
328A, Stanly Road, Jaffna
Tel: 222 4459, 0772533390 Fax: 2224460



PHYSICS ENGLISH MEDIUM

2012 ELECTRICITY Sunday 8.30
2013 HEAT Sunday 10.30
2014 MECHANICS Sunday 2.30

By: KUGANESWARAN Bsc(Hons)
Green Pearl Institute
Navalar Road, Infront of Touchwood, Jaffna.
T.P.No. 0774287373

(8162)





(C-6210)

# வட்டக்கச்சி ஊடான போக்குவரத்து தர்மபுரம் வரை இடம்பெற வேண்டும்

## பயணிகள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வட்டக்கச்சி ஊடாகப் பயணித்து விசுமடு வரை பயணித்து வந்த இ.போ.ச.மற்றும் தனியார் பேருந்துகள் கடந்த ஆறுமாதங்களாக கல்மடு நகர் வரையே பயணிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் கல்மடு நகர் சந்தியிலிருந்து பரந்தன்- முல்லைத்தீவு வீதியினை இணைக்கும் தர்மபுரம் வரையான 4 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதிக்கு இப்பேருந்துகள் பயணிக்காமையால் தர்மபுரம் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்நோயாளர்கள் கல்மடு நகரில் இருந்து தர்மபுரம் வரை அதிக பணம் கொடுத்து முச்சக்கரவண்டியில் பயணிக்க வேண்டிய நிலையுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் நோயாளர்கள் கிளிநொச்சிக்கு சென்று முல்லை- பரந்தன் வீதியூடாக 48 கிலோமீற்றர் தூரம் பயணித்து இவ்வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

எனவே, இந்த நிலையினை உரிய தரப்பினருக்கு பலமுறை எடுத்துக் காட்டியும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. போலிச் சாட்டுக்களையே முன்வைக்கிறார்கள்.

மக்களினால் இந்த பயண சிரமத்தை கருத்திற்கொண்டு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-263)

# இராசி பலன்

15.04.2012

(சித்திரை 03, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி முற்பகல் 8.30 மணிவரை
திருவோணம் பிற்பகல் 3.20 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை

**மேடம்** எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், பழைய வீட்டை பழுதுபார்க்கும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** பேச்சில் நிதானம் தேவை,அதிகம் செலவுகள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, வழிபாட்டில் ஆர்வம் காட்ட வேண்டிய நாள்,பயணங்களில் அவதானம் தேவை.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்,புதிய திருப்பங்கள் ஏற்படலாம், கனவுகள் நனவாகலாம்.

**சிங்கம்** கனிவான தகவல்கள் வந்து சேரலாம், பழைய கடன்களை வசூலிக்க எடுத்த புதுமுயற்சி வெற்றி பெறும்,வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், ஆரோக்கியமான. நாள், வழிபாட்டின் மூலம் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், எடுத்த முடிவுகளில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**துலாம்** தாய்வழி ஆதரவு பெருகும்,பணத் தேவைகள் பூர்த்தியாகும்,நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் குதூகலம். காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், பாராட்டும் புகழும் கூடும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** பொருளாதார முன்னேற்றம் ஏற்படும், எதிர்பாராத தனவரவுகள் ஏற்படலாம், பெண்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

**மகரம்** உடல் நலம் சீராகும்,பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் மேலோங்கும்,வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்,தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கும்பம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்,புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்,மாலை நேரம் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று நடைபெறலாம்,சிலரது தேவை கருதி அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள்,கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்,நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம்.

வளவன்

## புதுவருட ஆரம்ப வகுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பாடசாலையின் புதுவருட வகுப்பு ஆரம்ப நிகழ்வு நாளை திங்கட்கிழ்மை காலை 8.30 மணிக்கு நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொங்கலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நிலைய ஸ்தாபகர் கு.மகாலிங்கம், திருமதி மகாலிங்கம் ஆகியோர் கைவிசேடம் வழங்கி ஆசி வழங்கவுள்ளனர்.

(அ-3-29)

# வவுனியா நீதிமன்ற வளாகத்தில் வாகனங்கள் நிறுத்தி வைப்பு

## பெற்றுக்கொள்ள கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா நீதிமன்ற வளாகத்தில் பொலிஸ் நிலையங்களினால் உரிமை கோரப்படாது வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனங்கள் நாட்டில் ஏற்பட்ட கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் குண்டு வெடிப்புக்களின் போதும் அநாதரவான நிலையில் காணப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டவையாகும்.

துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏனைய வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனத்தின் உரிமை கோரக்கூடிய பத்திரங்களுடன் நீதிமன்ற அலுவலக நேரங்களில் தொடர்பு கொண்டு வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(அ-9-266)

# வாரம் ஒரு தகவல்

## அச்சம் தவிர்!

"என்ன இது? இவ்வளவு வேகமாக காரை செலுத்துகிறீர்கள்?"

"என்னுடைய மனைவியாக இருந்துகொண்டு நீ இப்படி பயப்படலாமா?"

"அதனாலேதான் பயப்படுகின்றேன்"

"தைரியமாக இரு. வேகமாகப் போவதற்குத் தானே கார் பயன்படுகின்றது"

"அதிகமாக உதறுகின்றது. ஸ்டியரிங் வீலை இறுக்கமாகப் பிடித்து காரை செலுத்துங்கள்"

"இன்னும் சிறிது காலத்திற்கு பின்னர் ஸ்டியரிங் வீலே இல்லாத கார் வரப்போகின்றது. உனக்கு அது தெரியுமா? அதற்குப் பதிலாக விமானத்திலே இருக்கின்ற மாதிரி ஜாய்ஸ்டிக் (Joy Stick) பொருத்தப் போகின்றார்கள். சுவீடனிலே ஒரு நிறுவனம் இது மாதிரியான கைப்பிடியை உருவாக்கியிருக்கின்றார்கள்"

"இது எப்படி பயன்படுத்தப்படும்?"

"இதைப் பிடித்து முன்புறமாகவும் பின்புறமாகவும் பக்க வாட்டிலும் தள்ளலாம். இதற்கு தகுந்த மாதிரி சக்கரம் அசையும். இதை ஒரு கணனி கட்டுப்படுத்தும். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் விமானத்திலே உள்ளது மாதிரியான கட்டுப்பாடுகள் அனைத்தும் அந்தக் காரிலும் இருக்கும்"

"இதனாலே என்ன சௌகரியம்?"

"சாரதி உட்காருவதற்கு வசதியாக இடம் கிடைக்கும். எதிரிலே உள்ள வீதியை தாராளமாகப் பார்க்க முடியும். இப்போது ஏற்படுகின்ற பல விபத்துக்களிலே ஸ்டியரிங் வீல் தான் சாரதிக்கு யமனாக இருக்கும். இனிமேல் அந்த ஆபத்து இருக்காது"

"பரவாயில்லை!"

"அந்த மாதிரியான கார்கள் வந்ததும் நான் இதைவிட இன்னும் வேகமாக செலுத்துவேன். விமானத்திலே போவது மாதிரியே இருக்கும்"

"அது வந்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது சற்று மெதுவாக செலுத்துங்கள். எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. இதயம் படபடவெனத் துடிக்கிறது"

"பயமாக இருந்தால் இதயம் படபட என்றுதான் துடிக்கும். இது மாதிரியான சமயங்களிலே கண்களை இறுக்கி மூடிக் கொண்டிருந்தால் பயம் தெரியாது"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அனுபவம்தான். இப்பொழுதுகூட நான் அப்படித்தானே வந்து கொண்டிருக்கின்றேன்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பொதுக்கூட்டம்

யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் என்.பி.பாலேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 35 | 40 | 50 |
| தக்காளி | 60 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 35 | 60 | 30 |
| பூசணி | 20-25 | 70 | 35 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 40-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 90 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 30 |
| கரணைக்கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 |
| லீக்ஸ் | -- | 70 | 70 |
| பீற்றூட் | -- | 20 | 20 |
| கறிமிளகாய் | -- | 60 | 60 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 300 |
| போஞ்சி | -- | 100 | -- |
| கத்தரி தம்புள்ள | -- | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 |

# தங்கம் கடத்த முற்பட்ட இலங்கைப் பெண் கைது

தங்கம் கடத்த முற்பட்ட இலங் கையைச் சேர்ந்த பெண் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

45 வயதான இவர் 800 கிராம் தங் கத்தை கடத்த முற்பட்ட வேளையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் திரு கோணமலையைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்ணின் மகன் மற்றும் மருமகள் சென்னையில் இருப்பதாகவும் விடுமுறை ஆகையால் அவர்களை சந் திப்பதற்காக சென்னை வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் இவரது தகவல்களில் சந்தே கம் கொண்ட அதிகாரிகள் அப்பெண் அணிந்திருந்த நகைகளை சோதனை யிட்டனர்.

வளையல்கள் மற்றும் மோதிரம் என் பன புதிதாக செய்யப்பட்டதை அதிகாரிகள் உணர்ந்தனர்.

இதேவேளை, ஏனைய இரண்டு பெண் களும் இவ்வாறு நகை அணிந்திருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களை விசா ரித்த போது அறிமுகம் இல்லாத யாரோ நகை களை தந்ததாகவும் சோதனை முடிவடைந்ததன் பின்னர் திருப்பித் தரு மாறும் தந்ததாக கூறியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அவர் களும் கைது செய்யப்பட்டனர். சுமார் 22 இலட்சம் ரூபா பெறுமதியான 12 நகைகளை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் இவர் களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர். (அ-2)

# விளையாட்டு அரங்கம் திறப்பு விழா இன்று

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சடையாண்டி கோவில் வீதியில் அமைந்துள்ள எட்வேட் தங்க வடி வேல், அருசபாரெத்தினம் ஆகியோரின் ஞாப கார்த்த ஐந்து நபர் கொண்ட உதைபந்தாட்ட மைதான வல்வை விளையாட்டு அரங்கத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சிங்கப்பூர் தேசிய பல் கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் கலா நிதி சபாஇராஜேந்தி ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தின ராக யாழ். மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக திருகோணமலை ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் வை.வேலும் மயிலும் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

செயற்கைப்புல் கொண்டு நவீன முறையில் அமைக்கப்பட்ட இந்த வகையான மைதானம் இலங்கையில் இதுவே முதற் தடவையாக நிர்மாணிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-9-63)

# நந்தன வருடப்பிறப்பு கைவிசேட தினங்கள்

வாக்கிய பஞ்சாங்கம்

கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.42 தொடக்கம் 9.44 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 9.56 தொடக்கம் 11.54 மணிவரை

15.04.2012 ஞாயிறு பிற்பகல் 12.06 தொடக்கம் 2.02 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.10 தொடக்கம் 9.44 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.52 தொடக்கம் 11.47 மணிவரை

16.04.2012 திங்கள் பிற்பகல் 12.03 தொடக்கம் 1.58 மணிவரை

திருக்கணித பஞ்சாங்கம்

கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு காலை 6.05 தொடக்கம் 6.50 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.00 தொடக்கம் 9.55 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.12 தொடக்கம் 9.48 மணிவரை

# சித்திரைப் புத்தாண்டு கிராமிய விளையாட்டு

(கரவெட்டி)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் சித் திரை புத்தாண்டு கிராமிய விளையாட்டுக் களில் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு மாலுசந்தியில் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் இன்றைய விளையாட்டு நிகழ்வு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கிறிஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, யானைக்கு கண்வைத் தல், கயிறிழுத்தல், சாக்கோட்டம், சிரித்தல் போட்டி, அழுதல் போட்டி போன்ற கிராமிய போட்டிகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் இரவு இசை நிகழ்வுகளும் இடம் பெறவு ள்ளன. (அ-3-24)

# 32 கழகங்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

கரணவாய் சோழங்கன் விளையாட்டுக் கழகத்தின் வடமராட்சிக்கு உட்பட்ட 32 கழகங்கள் கிரிக்கெட்போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன. இதில் அணிக்கு 12 ஓவர் கொண்ட 11 பேர் பங்கு கொள்ளவுள்ள னர்.

இதற்கமைவாக இன்று நடைபெறும் போட்டிகளில் கல்லுவம் அணியை எதிர்த்து செல் வாபுரம் அணியும் இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து விக்ரர் அணியும் மோதவுள்ளன.

வீனஸ் அணியை எதிர்த்து ஸ்ரீமுருகன் அணியும் திக்கம் இளை ஞர் அணியை எதிர் த்து பொலிகை ஐக்கிய அணியும் மோதவு ள்ளன. (அ-3-24)


ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?
உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்




எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!
பெண்களுக்கான மாதப்பிரச்சனை, கருமுட்டை உற்பத்தியின்மை, வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.

தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமையான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)

100% உறுதி

செல்: 0091 9842457673

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

Website: www. Sexualproblem.in



Email: sridevisiddha@gmail.com

செல் : 0091 9600336009

இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

(சு/6342)

APGraphic



NEWZELANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



தேவையான கல்வித் தகைமைகள்

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzeland நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzeland இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-
RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(8175)



அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே
NOKIA Connecting People
உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate ) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கிமி இலக்கங்களை (Himi Numbers ) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் ஏக விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD 158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:-0212220293, 0214925828, 0773659359, 0777705934 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

எமது ஸ்ரீலங்கா (Srilanka ) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia)உதிப் பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியன. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card ) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

NOKIA Connecting People

From:-
Softlogic Communication (Pvt)Ltd
No 4, Defonseka Road,
Colombo-05

SVM TECHNOLOGY (PVT)LTD
158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சு/605)


வெளிநாட்டிலிருந்தும்
பணம்
செலான் எம்மிடமிருந்தும்
பணம்
மற்றும் வெளிநாட்டு சுற்றுலா விமான பயணச் சீட்டு
"இப்போது உலகில் எந்த நாட்டிலிருந்தும் அனுப்பும் பணத்தினை இலகுவாகவும் மற்றும் துரிதமாகவும் பெற்றுக்கொள்வதற்கு செலான் வங்கிக்கு வருகை தாருங்கள்..."
இலங்கை கூடைப்பந்து அணியின் தலைவி தர்ஜினி சிவலிங்கம்
அது மாத்திரமா
• பாங்கொக் மற்றும் இந்தியா சென்றுவர விமானச்சீட்டுகளை வென்றிடும் வாய்ப்பு
• கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைவருக்கும் ரூ. 200 பெறுமதியான பண வவுச்சர்
• குறைந்த கட்டணம், பாதுகாப்பான நட்புரீதியான சேவை
• அதிஉயர் நாணய மாற்று வீதம்
மேலதிக தகவல்கள் அருகிலுள்ள செலான் வங்கியில்
துரித அழைப்பு : 0112 452 666
இம்மகத்தான வாய்ப்பு ஏப்ரல் 2ம் திகதி முதல் மே 31ம் திகதிவரை கீழ்காணும் கிளைகளில் மட்டுமே.
யாழ்ப்பாணம் அம்பாறை களவாஞ்சிக்குடி
நெல்லியடி மட்டக்களப்பு கந்தளாய்
மன்னார் காத்தான்குடி
கிளிநொச்சி திருகோணமலை
வவுனியா செங்கலடி
முல்லைத்தீவு கல்முனை
சங்கானை சியம்பலாண்டுவை
சாவகச்சேரி சம்மாந்துறை
மானிப்பாய் பொத்துவில்
GRACE
SEYLAN BANK PLC
தாய்லாந்துக்கு விமானப் பயணச்சீட்டு
இந்தியாவுக்கு விமானப் பயணச்சீட்டு
Rs: 200
Gift Voucher
Rs: 200
Gift Voucher
SEYLAN
*நிபந்தனைகள் அடங்கும்
SPEEDCASH NOW
XPRESS MONEY
Send now. Receive now.
MoneyGram Money Transfer
SEY CASH
Money to Sri Lanka
AFXFASTREMIT
SEND & RECEIVE MONEY INSTANTLY
ARY Speed Remit
MONEY TRANSFER
PLACID EXPRESS
Worldwide Money Transmitter
EzRemit
INSTANT CASH
GLOBAL MONEY TRANSFER
செலான் டவர்ஸ், இல.90, காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: +94 11 2456789, +94 11 4701000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல் : info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating: 'A-(lka)'
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி
www.eseylan.com
(சி/6378)

# கொல்லப்பட்ட ஈழத் தமிழரின் பின்னால் ஏழு கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்



இலங்கை அரசுக்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது. இந்த வஞ்சக சூழ்ச்சியால்தான் விடுதலைப்புலிகள் போரில் தோற்றனர்.

## தமிழீழம் அமைக்க வாக்கெடுப்பு அவசியம் என்கிறார் வைகோ

(கொழும்பு)

**தமிழீழம் அமைய ஐ.நா.சபை சார்பில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆலோசனை கூறியுள்ளார்.**

**உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் எழுதிய பிரபாகரன்- தமிழர் எழுச்சியின் வடிவம் நூல் வெளியீட்டு விழா சென்னை தியாகராய நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

இப்போது இலங்கையின் கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்கள் குடியேற்றம் விரைவாக நடைபெறுகிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஈழத் தமிழர்களைக் கொன்று விட்டதாக இலங்கை அரசு கருதலாம்.

ஆனால், ஈழத் தமிழர்கள் பின்னால் 7 கோடி தமிழர்கள் இருக்கின்றனர் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்கு தமிழீழம் ஒன்றுதான் தீர்வாக இருக்க முடியும். ஐ.நா.சபை பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அப்படி பொது வாக்கெடுப்பு எடுத்து தமிழீழம் அமைக்காவிட்டால் மீண்டும் விடுதலைப்புலிகள் ஆயுதம் தாங்கிப் போராடுவார்கள்.

பொது வாக்கெடுப்பா ஆயுதமா என்பதை வரலாறே தீர்மானிக்க முடியும். ஆயுதம் தாங்கிப் போராடுவதைத் தவறு என்று யாரும் சொல்ல முடியாது. தவறு என்றால் எல்லா நாடுகளும் தங்கள் ஆயுதங்களை பசுபிக் கடலில்தான் கொட்ட வேண்டும். எந்த நாடாவது அப்படிச் செய்ய முன் வருமா?

வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு ஆயுதம் வாங்குவதற்குத்தான் எல்லா நாடுகளும் நிதி அதிகம் ஒதுக்குகின்றன என்பதை மறந்து விடக்கூடாது. எனவே, ஆயுதம் எடுப்பதில் தவறு இல்லை. பழ.நெடுமாறன் எழுதியுள்ள இந்த நூல் ஈழத் தமிழர்களின் அடுத்த கட்டத்துக்கான ஆயுத சாலையாகப் பயன்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பழ.நெடுமாறன் பேசியதாவது, பிரபாகரன் புகழ் பாடுவதற்காக இந்த நூலை எழுதவில்லை. அதை அவர் விரும்பவும் மாட்டார். ஈழத் தமிழர்களின் தியாகத்தையும் வீரத்தையும் இளைய தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எழுதியுள்ளேன். பிரிட்டிஷார் ஆட்சியில் தமிழர்கள் கூலிகளாகத்தான் பார்க்கப்பட்டனர்.

இந்தப் பார்வை சுதந்திர இந்தியாவிலும் தொடர்ந்தது. விடுதலைப்புலிகளுடைய எழுச்சிக்குப் பின்னரே இந்தப் பார்வை மாறியது.

வீரம் நிறைந்தவர்களாக இப்போது தமிழர்கள் பார்க்கப்படுகின்றனர் என்றார். இந்நிகழ்ச்சியில் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ நூலினை வெளியிட தமிழத் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.பாலசுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார்.

விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஆர்.நல்லகண்ணு, தமிழ்த் தேசிய பொதுவுடைமை கட்சித் தலைவர் பெ.மணியரசன், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உட்பட பலர் பேசினர். விழாவில் பழ.நெடுமாறனுக்கு ம.தி.மு.க.சார்பில் தங்கப் பேனா பரிசளிக்கப்பட்டது.

(அ-2)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 90 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனத்தை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய மதுபோதையில் வாகனம் செலுத்திய 90 இற்கும் அதிகமான சாரதிகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் வேலைத் திட்டம் கடந்த 9 ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் ஒரு வாரகாலத்திற்கு நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ)

## முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை கருவிகள்

### மக்கள் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் சிறுகடைகளில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவு கருவிகள் மற்றும் லீற்றர் கான் என்பவற்றுக்கு சீல் பண்ணப்படாது இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்..

இதனைவிட எரிபொருள் அளப்பதற்கு சில கடைகளில் சோடா போத்தல் மற்றும் தண்ணீர் போத்தல் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இங்குள்ள கடைகளில் பொதிகளில் பொறிக்கப்பட்ட விலைகளுக்கு மேலாக அன்றாட பாவனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அண்மையில் தீப்பெட்டி ஒன்று 5 ரூபா முதல் 10 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, உரிய அதிகாரிகள் நடவடிக்கை யினை மேற்கொண்டு இவ்வாறான பிரச்சி னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். (அ-3-64)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சிவநகர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் நாளை காலை 8.30 மணிக்கு கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளதென கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் அதிபர்களோடு பதவி நிலை உத்தியோகத்தர்கள், சேவைக்கால ஆசிரியர்கள் ஆகியோரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-254)




ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்

**வாழும் கலை பயிற்சி**

மூச்சுப்பயிற்சி, பிராணாயாமம், யோகா, தியானம், சுதர்சன கிரியா

**இலவச அறிமுகவுரை 15.04.2012 மாலை 5 மணிக்கு**

இடம்: சிவன் கோவில் கல்யாண மண்டபம், பருத்தித்துறை.

பயிற்சி: 16.04.2012 - 21.04.2012

காலம்: மாலை 2.00-4.30, 05.00-07.30

*முற்பதிவு அவசியம்*

0779037321

0770474757

(இ)



யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்




பழைய மாணவர் சங்கம்

பெருமையுடன் வழங்கும்

**மாபெரும் கலை விழா**

இடம் : கல்லூரி மைதானம்

காலம் : 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பிற்பகல் 04.30 மணி

- மங்கல இசை
- நாட்டியாஞ்சலி
- நாடகம்
- நாட்டுக்கூத்து
- இன்னிசை கானங்கள்

**பிரவேச அன்பளிப்பு 1000/=, 500/=, 250/=,**

**மாணவர்கள் 50/=**

அனைவரும் வருக; கலையின்பம் பெறுக; ஆதரவு தருக.

- பழைய மாணவர் சங்கம் -

யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(இ)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### இமயம் தொட...



இழப்புக்களின் முடிபு
இழப்புக்களல்ல
ஆக்கங்களுக்கு முடிபு
அழிவுகளல்ல
தோற்றங்கள் மாறினும்
செய்யும் தொண்டுகள்
உண்மையாயின்
உணர்வாய்...
ஆக்கங்களுக்கு முடிபு
அழிவல்ல....

மாவை நா.கஜேந்திரன்

### நீயும் நானும்

காலைச் சூரியன் பளிச்சிடும்
பனித்துளிகள் அனைத்திலும் நீதான்
அதனால் தானோ–என்
மனதிற்குள் மகிழ்ச்சி
இருப்பினும் இரவுகள் மட்டும் நரகமாக
நிலவாய் நீயும் கடலாய் நானும்
பார்த்துக் கொண்டு மட்டுமே இருக்கிறோம்
நினைக்கிறாயா? என்னை நீ என்றால்
உன் மனது திறந்து கூறும் போது
நானும் நிறைந்திடுகிறேன் உன் மனதில்
இருப்பினும் உன்னை நான்...
இப்படிச் சொன்னால் என்னை நீ
கோபிப்பாயா? நான் மரணித்தால்
தானே மறக்க முடியும்
என் சுவாசமே நீதானே



எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்

### அவரவர் பார்வையில்

#### உனக்காக

காத்திருப்புக்கள்
நிச்சயம் கனதியானவைதான்
ஆனால்....
உனக்காக எனும் போது
சுகமான சுமையாகிறது...

பா.பொன்நிலவன்
மீசாலை

#### உதிர்வுகள்

இனம் புரியாத உணர்வுகளை
இனங்கண்டு கொண்டபோது தான்
உனக்குள் நான்
இடம்பிடித்துக் கொண்டேன்
நீ... நிறம்மாறிய போது

சு.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

#### கவிதை

கவிதை எழுத விரும்பினேன்
காதலித்தால் கவிதை வரும்
என்றார்கள்
நானோ நேசித்தேன் நண்பர்களை
தானாய் வந்தது கவிதை

த.கஜனேந்திரராஜா
யா/தேசிய கல்வியியல் கல்லூரி

### கலாசாரப் பிறழ்வு

சுடிதார் தாவணி என்று
வலம் வந்த– எம் மண்ணில்
ஜீன்சும் ரிசேட்டும் சாலையோரம்
சிரித்தபடி போகிறது
தனை நிகரில்லா தலைவன்
இருந்த பூமியிலே நிர்வாண
அசிங்கங்கள் வலம் வருகின்றன
கற்பழிப்பும் கருச்சிதைவும்
அரங்கேறிக் கொள்ளவும்
இணைய விபச்சாரமும்
புதிதாய் பரவிக் கொள்கிறது
தொலைபேசிக் காதலும்
முகம் தெரியா மோகமும்
சமூகத்தில் புதிதாய் முளைத்து
பலகுடும்பங்களும் மாண்டே போகிறது
எத்தனை நடைமுறை வந்தாலும்
தன்மானத்தை விடாத தமிழன்
இன்றும் இருக்கின்றான்

ஜே.எஸ்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்

### சீர் கேடு

பிள்ளையின் கையில் கான்போன்
அன்னையின் விழியில் கண்ணீர்
தந்தையின் வியர்வையில் கிற்காட்
உறவுகளின் தொடர்பு அறுந்து போனது
அமைதியை தரும் ஆலய வளவில்
கேளிக்கை நிகழ்வு சங்கமம்
அறிவின் வித்தியாலயத்தில்
ஆளை மயக்கும் போதைப்பொருள்
நித்திய வாழ்வில் நிம்மதி போச்சு
நிலத்தடி நீர் கூட கெட்டுப்போச்சு
மறக்கவே முடியாது உலகை
என்ன தான் நடக்குமோ
பிறந்த ஆண்டில்

சுவேந்திரன்
முள்ளியவளை

## மௌனத்தின் தேடல் – 117



### சமத்துவம்

அரசுக்கும் ஆண்டிக்கும்
ஆறடிதான் இறுதியிலே
உண்மைச் சமத்துவத்தை
உணர்த்தவே –நீ
உறவாடுகிறாய் எச்சங்களுடன்...

வா.ஜெயபிரசன்னா
யா/ஹாட்லி கல்லூரி

### ஓரவஞ்சனை

பூமித்தாயே உன் மடியிலிருந்து
பொன்னென்றும் வைரமென்றும்
எத்தனையோ கனிய வளங்களை
வாரிவழங்கியவள் நீ
எம்மவர்க்கு மட்டும் ஏன்
எலும்புத்துண்டுகளையும்
மண்டையோடுகளையும்
கொடையாகத் தந்தாய்?
உனக்கும் எம் மீது ஓரவஞ்சனையா?

லீலா.சிவவடிவேல்
இணுவில் மேற்கு

### வெளியே சொல்லாது

சொன்னதைச் செய்வேன்
செய்வதைச் சொல்வேன் என்ற
சிந்தனைகளைப் புதைத்துவிட்டு
நெஞ்சை நெருடும் வேதனைகளை
வெளியே சொல்லாது....
கனவில் கற்பனையில் காண்பதே
நிம்மதி என்ற மனநிலைதான்
மனிதர்களில் ஓங்கி நிற்கின்றது.

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### உறங்க மறுக்கிறது

உதிரத்தின் உறவுகளே
உறங்க மறுக்கிறது உம்
நினைவில் என் விழிகள்
சரிந்துபோனதோ உங்கள் உயிர்
இந்த மண்ணில் மடிந்த
போதும் உங்களுக்கு மண்ணில்
இடம் இல்லையென்று எழுந்து
தான் நிற்கின்றீரோ
எலும்புக் கூடுகளாய்

சந்திரன்.தேவி
மானிப்பாய்

### சுடுகாடு

தங்கள் சொந்தநிலங்களை
அபகரிக்கும் கயவர்களின்
இழிநிலை கண்டு வெம்பி
அழிந்து போன உறவுகளின்
எலும்புக் குவியலருகிருந்து
இனிச் சுடுகாடு தான் எமக்குச்
சொந்தம் மென்று எண்ணுகின்றானோ?

துரை
தென்மட்டுவில்

### காத்திருப்பு

உயிரைத்துச்ச மென எண்ணி
அச்சமின்றி இலட்சியத்திற்காக
மிச்சமிருக்கும்
மனித எச்சங்களுடன்
நிச்சயம் தர்மம் வெல்லுமென்று
அதர்மத்திற்கு முன்னாள் தர்மம்
சத்தியாகிரகம் செய்கின்றதா?
மனித உருவில் இருந்து

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### மானிடனே

வேதனையின் விளிம்பில்
எலும்புகளின் அருகில்
என்ன தான் சிந்தனையோ
எலும்புக் குவியல்களிடையே
உன் உறவுகளை
தேடுகிறாயா?
உறவுகளின் உடல்கள்
கிடைக்காத போதும்
எலும்புகளாவது கிடைத்ததுவே

மனோ.விநோத்
மாலுசந்தி

### உறவுகள்

பிரிந்துபோன என் உறவுகளை
பிரிய மறுக்கிறது எனது மனம்
அதனால் நான் இன்று
உறவுகளின் எலும்புக் கூடுகளுடன்

அ.கிருசாந்தினி
கொம்மாந்தறை

### நெஞ்சு பொறுக்குதில்லையே

ஓயாது உழைத்த
உடலும் உள்ளமும்
ஓய்வு பெறும் நேரமய்யா
அறுபதைத் தாண்டி
நீர் அமைதி காணும்
வேளை ஐயா
பிள்ளைகளின் நிழலிலே
சுகம் காணும் கோலமையா
அன்புக் கூட்டத்தில்
களித்திடும் நேரத்தில்
என்புக் கூட்டத்தினருகில்
ஏங்கித் தவிக்கின்றீரோ

பா.பாமினி

### இதுவும் உன் உறவே!!

மனிதா உயிரற்று உடலற்றும்
எலும்பாக உள்ள இவற்றில்
எது என் உறவினுடையது
என யோசிக்கிறாயா?.
நிச்சயம் இதுவும் உன்
போன்ற தமிழரினதே

துஷாந்தி.சுதாகர்
கற்கோவளம்

### விதைக்கப்பட்டவர்கள்

மனித மண்டையோடுகளா இவை?
மனிதத்தை குழிதோண்டி
புதைத்திட்ட முள்ளிவாய்க்காலின்
அழிவுச் சின்னங்களா?
தமிழா அழிவினை கண்ணுற்று
கலங்கிடலாமா?
தமிழர்கள் புதைக்கப்பட்டவர்கள்அல்ல
வளர விதைகளாக
விதைக்கப்பட்டவர்கள்
உணர்ந்து செயற்படு
புதுயுகம் படைத்திடு

கமலா இளங்கோவன்
யாழ்ப்பாணம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் –118



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 20.04.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழ்நாட்டைச் சேர்ந்த அ.தி.மு.க. விலகினாலும்
# இந்திய நாடாளுமன்ற குழு இங்கு வருவது உறுதி
## வெளிவிவகார அமைச்சு தகவல்

தமிழ் நாட்டைச்சேர்ந்த அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் விலகிக் கொண்டாலும் கூட இந்தியாவின் அனைத்தக் கட்சி நாடாளுமன்ற குழுவின் இலங்கைக்கான பயணம் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

திட்டமிட்டபடி நாளை வரவுள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரத் திசநாயக்க சீன செய்தி நிறுவனம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நல்லெண்ண பயணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியக்குழுவினர் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு பகுதியை சென்று பார்வையிடவுள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் சரத் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற குழுவின் பயணம் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டறிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் குற்றம்சாட்டி தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா தமது கட்சியின் சார்பில் நியமித்த பிரதிநிதியை இந்தக் குழுவில் இருந்து விலக்கிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய எம்.பி.க்களின் இலங்கை பயணம் கைவிடப்படுமா? அ.தி.மு.க. தனது பிரதிநிதியை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டதால் இலங்கை செல்லவுள்ள இந்திய எம்.பி.க்கள் குழுவின் பயணம் இரத்து செய்யப்படலாம் அல்லது தள்ளிப் போடப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இலங்கை செல்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய எம்.பி.க்கள் குழுவைப் பார்த்தால் அதில் இலங்கைத் தமிழர்கள் பால் தீவிரமான பற்றோ அல்லது ஈழத்தமிழர்களின் அவல நிலை குறித்து இரத்தக் கண்ணீர் விடும் அளவோ அல்லது உண்மையான மறுசீரமைப்பு மற்றும் மறு வாழ்வு குறித்து அக்கறை காட்டுவோரை விரல் விட்டு எண்ணி விடலாம்.

காரணம் அந்தக்குழுவில் ம.தி.மு.க.வில் இருந்து யாரும் இல்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து யாரும் இல்லை. விடுதலைச்சிறுத்தைகள் இல்லை. மாறாக ஈழத்தமிழர்களுக்காக பெரிய அளவில் எதுவும் செய்து விடாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஐந்து பேரை சேர்த்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து ஈழத்தமிழர்கள் மீது உண்மையான அக்கறை உள்ளவர்களை அதில் சேர்க்கவில்லை. மாறாக வட இந்தியாவைச் சேர்ந்த எம்.பி.க்களை அதிகம் இணைத்துள்ளனர். இவர்களுக்கு ஈழப் பிரச்சினை என்ன என்று கூட முழுமையாகத் தெரியாது.

சுஷ்மா சுவராஜ் போன்ற மூத்த தலைவர்களுக்கே கூட சமீப காலத்தில் தான் இந்தப் பிரச்சினை குறித்து அரைகுறையாக தெரிந்தது. இப்படி இருக்கையில், திருமாவளவன், ம.தி.மு.க. , சி.பி.ஐ. போன்றவர்களை சேர்க்காமல் போனதற்கு ராஜபக்ஷ அரசு கொடுத்த நெருக்குதல் தான் காரணம் என்று கூறப்படுகின்றது.

தற்போது இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா வேண்டாத விருந்தாளியாக மாறி விட்டது. இந்த நிலையில் குழப்பமான சூழ்நிலையில் எம்.பி.க்கள் குழுவை அனுப்புவது குறித்து மத்திய அரசும் கூட யோசனையில் இருப்பதாக தெரிகிறது.

இந்தக்குழுவில் முன்பு வெங்கையா நாயுடு இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இவருக்கு ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து ஓரளவுக்குத் தெரியும்.

அதேபோல பா.ஜ.கவை சேர்ந்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் யஷ்வந்த் சின்ஹாவும் இடம்பெறலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது. இவர் சேர்க்கப்பட்டிருந்தால் தைரியமாக நான்று வார்த்தையாவது ராஜபக்ஷவிடம் பேச வாய்பபு ஏற்பட்டிருக்கும். ஆனால் இவர்களை மத்திய அரசு சேர்க்கவில்லை.

மாறாக எம். கிருஷ்ணசாமி, சுதர்சன நாச்சியப்பன், மாணிக்க தாகூர் என சம்பந்தமில்லாதவர்களை சேர்த்துள்ளனர். இதில் மாணிக்க தாகூர் ராகுல்காந்தி கோஷ்டியை சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. இதிலும் கோஷ்டி இட ஒதுக்கீட்டை காங்கிரஸ் கடைப் பிடித்துள்ளதோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமே இல்லை என்ற அள்வில் தான் தற்போதைய உறுப்பினர்கள் பலரும் உள்ளனர். இப்படி ஒரு குழுவை எதற்காக, எந்த நோக்கத்திற்காக மத்திய அரசு இலங்கைக்கு அனுப்பவுள்ளது என்பதும் புரியவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)


## குத்தகை ஏலத்தில் விடல் -2012
### கரைச்சிப்பிரதேசசபை, கிளிநொச்சி

கரைச்சிப்பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறைச்சிக்கடை 2012 ஆம் ஆண்டுக்கு மீள் ஏ லத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய ஏலம் கோரப்படுகின்றது.

ஏலம் விடப்படும் திகதி:- 20.04.2012 மு.ப. 10.00 மணிக்கு
ஏலம் விடப்படும் இடம்:- கரைச்சிப் பிரதேசசபை தலைமை அலுவலகம்.

| இல | குத்தகையின் பெயர் | ஏல வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|
| 01 | வட்டக்கச்சி மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 |

நிபந்தனைகள்

1. ஏலத்தில் பங்குபற்றுபவர் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்தக்கூடிய ஆவணமும் அதன் பிரதியும் கொண்டு வருதல் வேண்டும்.
2. ஏலத்தில் வைப்புப்பணத்தை செலுத்திய பின்னரே ஏலத்தில் பங்கு பற்ற முடியும்.
3. கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் ஏலத்தில் பங்குபற்றத்தவறியவர்களாவர்.
4. ஏலத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கு ஏல சபைக்கு அதிகாரமுண்டு.
5. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றின் ஒரு பகுதி பணத்தினை உடனடியாகச் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும். தவறின் அவரின் பெயர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவதுடன் ஏல வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. ஒப்பந்தத்தின் குறிப்பிடப்படும் காலம் முதல் கடையை நடாத்த முடியும்.
7. மேலதிக விபரங்களை கரைச்சிப்பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திலிங்கம் குகராசா,
தலைவர்,
கரைச்சிப்பிரதேசசபை,
கிளிநொச்சி.

(ஸ்ரீ-6377)




முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட முத்தையன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலக கிராமிய வங்கி என்பவற்றை கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் திறந்துவைப்பதை படத்தில் காணலாம்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு
# நிறுவப்பட வேண்டியது அவசியம்
## ஹர்சடிசில்வா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சடிசில்வா தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா மனித உரிமை பேரவை அமர்வுகளில் அரசாங்கம் அடைந்த தோல்வியை ஈடுசெய்யும் நோக்கில் சில மாகாண சபைகளுக்கான தேர்தல்களை துரிதப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படும் வரையில் தேர்தல்கள் பக்கச்சார்பின்றி நடைபெறும் என்பதனை நம்பமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சடி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜெனீவா பிரச்சினை காரணமாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 101


## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு



ஜேர்மனிய இயந்திரத் துப்பாக்கி வீரன்

1944 கோடைவாக்கில் பாசிச ஜேர்மனியப்படைத்லைமை பைலோருஷ்யாவில் பலமான, பல மண்டலங்களையுடைய, பல படை வரிசைகளை உள்ளடக்கிய தற்காப்பைத் தோற்றுவித்தது நேரடி நடைமுறைத் தற்காப்பு மண்டலம் 8-12 கி.மீ. மொத்த ஆழத்தையுடைய இரண்டு மண்டலங்களால் ஆனதாக இருந்தது. இதன் பின்னால் பெரும்பாலும் தினேப்பர், துரூத், பெரெஸினா ஆறுகளின் உடாகச் செல்லும் 4 பிரதான மற்றும் ஒருசில இடைத்தற்காப்பு மண்டலங்கள் இருந்தன். வித்தெப்ஸ்க், ஓர்ஷா, மொகிலோவ், ஷ்லோபின், பரீசவ், பப்ரூய்ஸ்க், நகரங்கள் பெரிதும் பலப்படுத்தப்பட்டிருந்தன. பைலோருஷ்யாவில் பாசிச ஜேர்மனியத்துருப்புகளின் தற்காப்பின் மொத்த ஆழம் 250-270 கி.மீ.களாக இருந்தது.

ஆயிரத்து 100 கி.மீ. நீளமுள்ள போர்முனையில் 1வது பால்டிக் சேனை, 2-வது, 1-வது பைலோருஷ்ய சேனைகளின் முன் எதிரியின் பெரும் படைத்திரட்டு தற்காப்பில் நின்றது. வடக்குப்படைத் தொகுதியின் 16வது படையின் வலது பக்கவாட்டு யூனிட்டுகளும், 3-வது டாங்கி, 4-வது, 9-வது மற்றும் 2-வது படைகளை உள்ளடக்கிய சென்டர் படைத்தொகுதியும் (தளபதி பீல்ட்மார்ஷல் ஜெனரல் புஷ்), வடக்கு உக்ரேன் படத்தொகுதியின் 4-வது டாங்கிப்படையின் இடது பக்கவாட்டு யூனிட்டுகளும் -மொத்தமாக 63 டிவிஷன்களும் 6 பிரி





உக்ரேனில் ஜேர்மனிய டாங்கி சோவியத்படைகளின் தாக்குதலினால் நகரமுடியாத நிலையில்

கேடுகளும் -இப்படைத்திரட்டில் அடங்கியிருந்தன. இவற்றில் 12 இலட்சம் பேர்கள் இருந்தனர். 9 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 900 டாங்கிகள் மற்றும் திடீர்தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. 6-வது வான்படையையும் 1-வது, 4-வது வான்படைகளின் பிரிவுகளையும் சேர்ந்த சுமார் ஆயிரத்து 350 விமானங்கள் தரைப்படைகளுக்கு வானிலிருந்து ஆதரவளித்தன.

4 மத்திய சேனைகளின் சக்திகளைக் கொண்டு ஒரே நேரத்தில் ஆறு திசைகளில் எதிரியின் தற்காப்பைப் பிளப்பது. முதலில் வித்தெப்ஸ்க், பப்ரூய்ஸ்க் பிரதேசங்களில் எதிரியின் பெரும் சக்திகளை சுற்றிவளைத்து ஒழித்துக்கட்டுவது, தாக்குதலைத் தெடர்ந்து மீன்ஸ்கிற்கு கிழக்கேயுள்ள பிரதேசத்தன் 4-வது ஜேர்மனியப் படையின் பிரதான சக்திகளைசுற்றி வளைத்து தோற்கடிக்கச் செய்வது, பின் சோவியத்யூனியனின் மேற்கு எல்லைகளை நோக்கி முன்னேறுவது என்று உயர்மட்டப் பிரதான படைத் தலைமையகம் திட்டமிட்டது.

1-வது பால்டிக் சேனைக்கு ஜெனரல் பாக்ரமியானும் 3-வது பைலோருஷ்ய சேனைக்கு ஜெனரல் செர்னியா ஹோஸக்கியும் 2-வது பைலோருஷ்ய சேனைக்கு ஜெனரல் ஸஹாராவும் 1-வது பைலோருஷ்ய சேனைக்கு ரக்க சோவ்ஸ்கியும் தலைமை தாங்கினர். 1-வது பைலோருஷ்ய சேனையில் அடங்கியிருந்த, மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட போலந்து இராணுவத்தின் 1-வது படைக்கு ஜெனரல் பப்லாவ்ஸ்கிய் தலைமை தாங்கினார். இதோடுகூட எதிரியின் பின்னணிகள் மற்றும் போக்குவரத்து மார்க்கங்களின் மீதான தாக்குதல்களை அதிகப்படுத்தி, எதிரியின் சேமப் படைகளைக் கட்டிப்போட்டு, தமது துருப்புகளின் தாக்குதலுக்கு உதவும் கடமை பைலோருஷ்யாவின் கெரில்லாப்படை யூனிட்டுகளின் முன் வைக்கப்பட்டது.1944ஆம் ஆண்டு கோடையில் பைலோருஷ்யாவில் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் கெரில்லாப் படைவீரர்கள் போரிட்டனர்.



ஜேர்மன் டாங்கிப்படைகளின் நகர்வு-உக்ரேனில்

4 சோவியத்சேனைகளில் 14 இலட்சத்திற்கும் கூடுதலான போர்வீரர்கள் இருந்தனர். 31 ஆயிரம் சாதரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 5 ஆயிரத்து 200 டாங்கிகள், தானியங்கிப் பீரங்கி அமைப்புகளும் இருந்தன. மேற்கூறிய சேனைகளை முறையே 3-வது,1-வது,4-வது,6-வது மற்றும் 16-வது வான்படைகளின் விமானங்கள் -மொத்தமாக 5 ஆயிரத்துக்கும் அதிகமான போர் விமானங்கள்- ஆதரித்தன. தொலைதூர விமானப் படையும் (தள்பதி விமானப்படை மார்ஷல் கலவானவ்) வான் எதிர்ப்பு பாதுகாப்பு விமானப்படையும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. கெரில்லாப்படை வீரர்கள் துருப்புகளுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்டனர். உயர் மட்டப் பிரதானப் தலைமையகத்தின் பிரதிநிதிகளாகிய மார்ஷல் யூக்கவ்வும் மார்ஷல் வசிலேவ்ஷ்கியும் சேனைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிசைவித்தனர்.



நிலத்துள் ஆழ்த்தி நிலைப்படுத்தப்பட்டுள்ள பிரமாண்டமான ஆட்லரி-பைலோருஷ்யாவில்

சோவியத் படைத்தலைமையால் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட இவ்வளவு பெரும் சக்திகளும் சாதனங்களும், ஆள்பலத்தில் 2 மடங்கும் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 3.8 மடங்கும், டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 5.8 மடங்கும் விமானங்களில் 3.9 மடங்கும் எதிரியை விஞ்சி நிற்க உதவின.

சோவியத் ஜேர்மனியப் போர்முனையின் மத்திய பகுதியில் பெரும் படைத்திரட்டை ஏற்படுத்தி, அதை எதிரியிடமிருந்து மறைப்பது என்பது சிக்கலானதொரு காரியமாக இருந்தது, இதற்குப்பெரும்முயற்சிகள் தேவைப்பட்டன."நடைபெற இருந்த படை மாற்றத்திற்கும் பைலோருஷ்ய நடவடிக்கைக்கு அவசியமான அனைத்தையும் நாட்டின் உட்பகுதியிலிருந்து கொண்டுவருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்சியின் மத்திய கமிட்டி, பிரதான படைத்தலைமையகம் தற்காப்பு மற்றும் தகவல் தொடர்பு மக்கள் கமிசாரகங்களின் மத்திய நிர்வாகங்கள் அகியவற்றின் பெரும் உழைப்பும் கவனமும் தேவைப்பட்டன. நடைபெறவிருந்த கோடைகால நடவடிக்கைக்கான இந்தப் பெரும்தயாரிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் எதிரியிடமிருந்து மறைப்பதற்காக இந்தப் பிரமாண்டமான பணிமுழுவதையும் மிக இரகசியமான சூழ்நிலைகளில் செய்யவேண்டியிருந்தது" என்று சோவியத் யூனியனின் மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதுகிறார்.



அமெரிக்கத் தயாரிப்பான புதுரக டிரக்டரினால் சோவியத்தின் சக்கர ஆட்லரி நகர்த்தப்படுகிறது-பைலோருஷ்யாவில்

(தொடரும்)

# சரித்திரத்தில் பெரும் பதிவாகிவிட்ட டைட்டானிக் கண்ணீர்க் காவியம்



## டைட்டானிக் கப்பல் நீரில் மூழ்கி இன்று 100 ஆண்டுகள் நிறைவு

அன்பரசி அருட்செல்வன்
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

ஒரு நூற்றாண்டு கடந்தும் உலகச் சரித்திரத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகப்பெரும் கடல் அழிவு டைட்டானிக் கப்பல் விபத்து ஆகும். முதலாம் உலக மகா யுத்தத்திற்கு முன்பு அமைதிக்காலத்தில் நடந்த மிகப் பெரும் கடல் அழிவாக டைட்டானிக் கப்பல் மூழ்கிய சம்பவம் கருதப்படுகிறது.


அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதும் மூழ்கவே முடியாதெனவும் கருதப்பட்ட இக் கப்பல் தனது முதற் பயணத்திலேயே மூழ்கியது உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியது. 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற டைட்டானிக் விபத்தின் பதிவுகள் இன்று வரை பசுமையுடன் நினைவு கொள்ளப்படுகின்றன.

உலகப் போர்களாலும், பாரிய கடற்சீற்றங்களாலும் உலகம் பல அழிவுகளைச் சந்தித்திருந்தாலும் டைட்டானிக் கப்பல் மூழ்கியது உலகச் சரித்திரத்தில் மிகப் பெரும் வரலாற்றுப் பதிவாகப் பதியப்பட்டுள்ளது. அதன் அதிர்ச்சியும் சோகச் சுவடுகளும் உலக மக்களிடம் இருந்து இன்னும் மறையவேயில்லை.

வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவான ஆர்.எம்.எஸ் டைட்டானிக் என்ற இக்கப்பல் 1912 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மிகப்பெரும் ஆடம்பரப் பயணிகள் கப்பலாகக் கருதப்பட்டது. முதலாம் உலகப்போருக்கு முற்பட்ட காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் நாடுகள் பலவும் முன்னேற்றம் காண ஆரம்பித்தன.

அந்த வகையில் 1909 ஆம் ஆண்டளவில் கட்டப்படத் தொடங்கிய இக் கப்பல் 7.5 மில்லியன் டொலர் செலவில் முதலாவது நீச்சல் தடாகம் உள்ள கப்பலாக ஹார்லண், வூல்ப் என்போரால் 1911 இல் கட்டி முடிக்கப்பட்டது. 1912 இல்முதன் முதலாக சேவைக்கு விடப்பட்ட உலகின் மிகப்பெரிய பயணிகள் நீராவிக் கப்பலே இதுவாகும். இக் கப்பல் தனது முதற் பயணத்தை ஆரம்பித்த போது பலத்த எதிர்பார்ப்புக்களையும் அந்தக் காலத்தில் உச்சக்கட்டத் தொழில்நுட்பத்தை கொண்டிருந்ததால் பெரும் நம்பிக்கையையும் கொண்டிருந்தது.

டைட்டானிக் தனது முதற் பயணத்தை இங்கிலாந்தின் சௌதாம்பன் துறைமுகத்தில் இருந்து நியூயோர்க் நகரை நோக்கி ஏப்ரல் 10, 1912 இல் கப்டன் எட்வேட் சமித் தலைமையில் தொடங்கியது. புறப்படும் போது டைட்டானிக்கின் உந்திகளின் தாக்கம் அருகிலிருந்த நியூயோர்க் என்ற கப்பலை நகர்த்தி டைட்டானிக்கிற்கு மிக அருகில் செல்ல வைத்தது. இதனால் அது ஒரு மணிநேரம் தாமதித்தே புறப்பட்டது.



ஆங்கிலக் கால்வாயைத் தாண்டியதும் பிரான்சில் சேர்பூக்கில் நிறுத்தப்பட்டு கூடுதல் பயணிகள் ஏற்றப்பட்டனர்.

மீண்டும் அடுத்த நாள் அயர்லாந்து குயின்ஸ்டவன் என்ற இடத்தில் நிறுத்தப்பட்டு நியூயோர்க் நோக்கி 2240 பயணிகளுடன் செல்லத் தொடங்கியது.

ஏப்ரல் 14 இல் வெப்பநிலை குறைந்த கிட்டத்தட்ட உறை நிலையை அடைந்தது. பகல் 1.45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது.

ஆனாலும் இச் செய்தி டைட்டானிக்கை அடையவில்லை. இரவு 11.40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பலை மோதாமல் திசை திருப்பும் முயற்சியும் நிறைவேறவில்லை.

டைட்டானிக் 3 வகுப்புக்களைக் கொண்டிருந்தது. கீழ் வகுப்பில் பொதுவாக அமெரிக்காவில் குடியேறுவதற்காக சென்றவர்களே அதிகமாக இருந்தனர்.

முதல் வகுப்பில் புகழ்பெற்ற கோடீஸ்வரர்கள் இருந்தனர். கப்பலில் மொத்தம் 20 உயிர்க்காப்பு படகுகள் இருந்தன. முதலாம், இரண்டாம் வகுப்புப் பயணிகளுக்கு படகுகளில் ஏறுவது சுலபமாக இருந்தது. ஆனால் மூன்றாம் வகுப்புப் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கப்பலில் இருந்து ஆபத்துச் சமிக்ஞைகள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டிருந்தன. அண்மையில் இருந்த சில கப்பல்கள் செய்திகளை அனுப்பின.

ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. சரியாக அதிகாலை 2.20 க்கு கப்பல் முற்றாக மூழ்கியது. 1500 பேர் வரையில் உயிரிழந்தனர்.

கப்பலின் சேதமடைந்த பகுதிகளை 1985 இல் றொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு ஒன்று கண்டுபிடித்தது.

டைட்டானிக் கப்பல் இப்போது கடல் மட்டத்திலிருந்து 12000 அடி ஆழத்தில் இருக்கின்றது. டைட்டானிக் மூழ்கியதற்கு சந்திரனின் அதிக ஒளி வீச்சே காரணம் எனத் தற்போது கூறுகின்றனர்.

டெக்சாஸ் பல்கலைக்கழக ஆய்வின்படி 1400 ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்திரன் பூமிக்கு மிக அருகில் வரும்போது மிக அதிகமான ஒளி வீசும்.

அதனால் கடல்களில் உள்ள பனிப்பாறைகள் உருகி நீர்மட்டம் அதிகரிக்கும். அவ்வாறு வீசிய ஒளியின் காரணமாகத்தான் அட்லாண்டிக் கடலின் பனிப்பாறைகள் உருகி மிதந்து கப்பலில் மோதியது.

டைட்டானிக் கடலில் மூழ்கியது தொடர்பாக இதுவரை பல திரைப்படங்களும் சின்னத்திரைகளும் பெருமளவிலான புத்தகங்களும் வெளிவந்துள்ளன.

1963 ஆம் ஆண்டு டைட்டானிக் வரலாற்று அருங்காட்சியகம் (Titanic Historical Society) ஒன்று உருவாக்கப்பட்டது. இது நிஜமாகவே டைட்டானிக் இருப்பது போன்ற உணர்வை தருகின்றது.

இவ் அருங்காட்சியகத்தில் பல்வேறு கலைஞர்களினதும் வரலாற்று ஆய்வாளர்களினதும் கருத்துக்களும் டைட்டானிக் தொடர்பான பொருட்களும் உள்ளதுடன் மிக முக்கியமாக இவ்விபத்தில் இருந்து உயிர் தப்பிய 703 பேரின் அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டும் பாதுகாக்கப்படுகின்றன.

டைட்டானிக் கப்பல் விபத்தினை வெகு நேர்த்தியுடன் நிஜமாக மக்கள் கண் முன் 1997 ஆம் ஆண்டு வெளிவந்த டைட்டானிக் திரைப்படம் கொண்டு வந்தது. திரைப்படம் சொல்லிய காதல் கதை தவிர அனைத்துக் காட்சிகளும் சம்பவதின நிகழ்வின் சாட்சியங்களின் அடிப்படையில் பதியப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் கமருன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் லியானார்டோ டி காப்ரியோ, கேட் வின்ஸ்லெட் ஆகியோர் நடித்துள்ளனர். பலநூறு பக்கங்களில் சொல்ல முடியாத சோக சம்பவத்தினை 194 நிமிடங்களில் தத்ரூபமாக காண்பித்து சிறந்த படத்துக்கான விருது உட்பட 11 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது.

விமர்சன அடிப்படையிலும், வணிக அடிப்படையிலும் பெருவெற்றி பெற்றதுடன் இதுவரை இல்லாதபடி 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டிச் சாதனை நிகழ்த்தியது. இன்று 15 ஆண்டுகளுக்கு பின் தற்போது 3 டி தொழில்நுட்பத்தில் மீண்டும் ரிலீஸ் செய்யப்படவுள்ளது.

உலகின் பல பகுதிகளிலும் ஏப்ரல் 15 அன்று ஒரு நூற்றாண்டை நினைவுகூரும் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

நூற்றாண்டுகள் பல கடந்தாலும் உலக வரலாற்றில் டைட்டானிக் கப்பல் விபத்து என்பது அழிக்க முடியாத ஒரு அத்தியாயமாக உள்ளது. இன்றும் டைட்டானிக் கப்பல் குறித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# பாதாள ராட்சசன்

## அம்புலி மாமா கதைகள்



மகத ராஜ்யத்தை ஆண்டு வந்த சக்திசேனரின் ஆட்சிக் காலத்தில் ஒரு சமயம் சாதிக்கலவரம் உண்டாயிற்று.பல சாதிகளைச் சேர்ந்தவர்களிடையே ஒற்றுமை குறைந்து சண்டை, சச்சரவு பெருகின. நாட்டின் ஒழுங்கும், கட்டுப்பாடும் குலைந்தது. ஒவ்வொரு சாதியினரும் தங்கள்முக்கிய கடமைகளைப் புறக்கணித்து தேவையற்ற வம்பிலும் வழக்கிலும் ஈடுபட்டதால் ராஜ்யத்தின் அமைதி குலைந்தது. கலவரத்தையொடுக்க சக்திசேனர் புதிதாக பல சட்டங்களை இயற்றினார். அப்படியும் சண்டை சச்சரவு குறையவில்லை.

உடனே தன் முதன் மந்திரி சர்மாவை மன்னர் தீவிர ஆலோசனை செய்ய அழைத்தார். மந்திரியாரே நம் ராஜ்யத்தில் ஏற்பட்டு வரும் சாதிக்கலவரங்களை ஒடுக்கப் பல முயற்சிகள் நான் செய்தும் அவை பலனளிக்கவில்லை. உங்களுக்குப் புதிதாக ஏதாவது யோசனை தோன்றி உள்ளதா? என்று கேட்டார். மகாராஜா ! இந்த பிரச்சனைகளுக்கு மூல காரணம் என்ன என்பதை



விளக்க முதலில் உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன். அதை கவனமாக கேளுங்கள்! என்றார்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாதாளலோகத்தில் ராட்சசர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர் ஒரு சமயம் அகோரன் என்ற ராட்சசன் பாதாளலோகத்தைத் ஆண்டு வந்த ராட்சச மன்னனை எதிர்த்து கலகத்தில் இறங்கினான்.உடனே ராட்சச மன்னன் அவனை பாதாளலோகத்தில் இருந்து வெளியேற்ற அவன் பூலோகம் வந்து சேர்ந்தான்.

ஏராளமான மனிதர்கள் வாழும் பகுதியை அடைந்ததும் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனெனில் அவனுக்கு பசித்த போதெல்லாம் உண்பதற்கு நிறைய மனிதர்கள் கிடைத்தனர். அவனுடைய அகோர பசிக்கு நூற்றுக் கணக்கான மனிதர்கள் பலியாக பூலோகமெங்கும் கலவரம் உண்டாகியது.

அகோரன் இன்னும் சில ஆண்டுகள் பூமியில் வசித்தால் மனித குலமே நசிந்து போகும் என்று தோன்றியது. அகோரன் அவ்வாறு அட்டகாசம் செய்து வந்த காலத்தில் பூலோகத்தில் பல ராஜ்யங்களும் பல சிற்றரசர்களும் இருந்தனர். ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமை நிலவவில்லை. ஒவ்வொரு மன்னனும் தன் பக்கத்து ராஜ்யத்து மன்னனுடன் விரோதம் பாராட்டி வந்தான். அடிக்கடி போர் மூண்டதன் விளைவாக ஆயுதங்கள் ஏராளமாக தயாரிக்கப்பட்டன. மேலும் புதுவிதமான ஆயுதங்களை கண்டுபிடிப்பதிலும் படையெடுக்கத் திட்டம் வகுப்பதிலுமே மன்னர்கள் காலங் கழித்தனர்.

அதனால் அகோரன் திடீரென ஒரு ஊரில் தோன்றும் போது ஊர் மக்கள் திரண்டு அவனை ஆயுதங்களினால் தாக்கினாலும் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. சாதாரண ஆயுதங்கள் அவன் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அகோரனை மக்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்போது தான் அவர்களுக்குத் தாங்கள் தனிப்பட்ட முறையில் அவனை எதிர்க்க முடியாது என்ற ஞானோதயம் உண்டாயிற்று. பூலோகம் முழுவதும் ஒன்று சேர்ந்து ஒரேநேரத்தில் தாக்கினால் அவனை வதம் செய்ய முடியும் என்ற உண்மை புலப்பட்டது.

உடனே பூலோகத்திலிருந்து அனைத்து மன்னர்களும் ஒன்று கூடினர். வயது முதிர்ந்த ஒரு மன்னர் ல்ட்சம் எறும்புகள் ஒன்று சேர்ந்தால் ஒரு பாம்பையே கொல்ல முடியும். மெலிதான புற்களை ஒன்று சேர்த்து கயிறாக்கினால் அதைக் கொண்டு ஒரு யானையை கூட கட்டிப்போட முடியும். அது போல் நாம் அனைவரும் ஒன்று திரண்டு அவனைத் தாக்குவோம்! என்று அறிவுரை கூறினார். பூலோக மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர எண்ணிக்கை கோடியை தாண்டியது.

அனைவரும் தங்கள் பொதுப் பகைவனை எதிர்க்க ஒருங்கிணைந்து செயற்பட்டனர். மக்கள் ஒன்று கூடி அகோரனை சூழ்ந்து கொண்டு தாக்கினர். முதன் முதலாக அகோரன் மிரண்டு போனான்! பயந்து ஓடிய அகோரனை மக்கள் துரத்திச் சென்று விடாமல் தாக்க காயமடைந்த ராட்சசன் ஓடித் தப்பித்து கொண்டு காட்டிற்குள் புகுந்தான்.



மக்கள் தங்கள் சாதி, மத பேதங்களை மறந்து ஒற்றுமையாகி விட்டனர் என்றும் இனி அவர்களோடு தன்னால் மோத முடியாதென்றும் தெரிந்து கொண்ட அகோரன் அதன் பின்னர் மனிதர்களையே மறந்து விட்டு காட்டில் வாழும் மிருகங்களை மட்டுமே கொன்று தின்ன ஆரம்பித்தான்.

ஒருநாள் காட்டில் ஒரு பெண்ணைக் கண்ட அகோரன் பல நாட்களுக்குப் பின் மனித மாமிசம் கிடைக்கப் போகின்றது என்ற மகிழ்ச்சியில் அவள் மீது பாய அவள் திடீரென ஒரு ராட்சசியாக மாறினாள். அப்போது தான் அவளும் பாதாள லோகத்து வாசி என்று தெரிந்து கொண்டான். அவளை அவன் ஏற்கனவே பாதாளலோகத்தில் பார்த்திருக்கிறான். அவள் பெயர் அகோரிகா!

அவனைக் கண்டதுமே அவள் அகோரா உன்னைத் தேடித்தான் நான் பூலோகம் வந்தேன். நீ சென்ற பின்னர் எனக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை என்றாள். அவளிடம் தன் பூலோக அனுபவங்களை பகிர்ந்து கொண்ட அகோரன் பல நாட்களுக்கு எனக்கு மனித மாமிசம் தாராளமாக கிடைத்தது. இனி அது கிடைக்காது. ஏனெனில் பூலோக மனிதர்கள் தங்கள் வேற்றுமையை மறந்து ஒற்றுமையாகி விட்டனர். ஆகவே நாம் இந்தக் காட்டிலே தான் வசிக்க வேண்டி வரும்! என்றான்.

அடப் பைத்தியமே என்ற அகோரிகா மனிதர்கள் புத்திசாலிகள்தான் ஆனால் அவர்களிடையே காணப்படும் ஒற்றுமை தற்காலிகமானதுதான்! நாம் இந்த உருவத்தை விட்டு மனித உருவம் எடுத்து அவர்களிடையே வாழ்வோம்! பின்னர் அவர்களுடைய ஒற்றுமையைக் குலைப்போம்! அதை செய்து விட்டால் போதும்! நானும் நீயும் பூமியில் மனிதர்களிடையே ஆனந்தமாக வாழலாம்! என்றாள் மறுகணமே இருவரும் மனித உருவம் எடுத்து ஊருக்குள் நுழைந்தனர். அகோரிகா சொன்னது போல மனிதர்கள் புத்திசாலிகளாக இருந்தும் சுயநலம் மிக்கவர்களாக இருந்தனர். அகோரனும் அகோரிகாவும் மெதுவாக மனிதர்களிடையே சாதி, மத, மொழி வேற்றுமைகளுக்கான விதைகளை ஊன்றினர். சிறிது சிறிதாக மக்களிடையே சாதி, மதக் கல வரங்கள் உண்டாயின. மக்கள் ஒருவருக்கொருவர் தாக்கி இறக்க அவர்களின் உடல்களை அகோரனும் அகோரிகாவும் தின்றனர்.

இருவருக்கும் வாழ்க்கை மிக நன்றாக அமைந்து விட்டதால் பூலோகத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட முடிவு செய்தனர். அவர்கள் இருவரும் மண வாழ்க்கையில் இணைய வாரிசுகளும் தோன்றின. அவர்களிடம் குழந்தைகளே மனிதர்களுக்கு நாம் ராட்சசர்கள் என்று தெரியாத வண்ணம் நடந்து கொள்ளுங்கள். தெரி ந்தால் அவர்கள் மீண்டும் ஒற்றுமையாகச் சேர்ந்து நம்மை ஒழித்து விடுவார் கள் என்று இருவரும் புத்தி மதி கூறினர்.

மேற்கூறிய கதையை இந்த இடத்தில் நிறுத்திய மந்திரி இன்றும் அகோரனுடைய சீந்ததியினர் நம் இடையே பரவியிருப்பதுதான் சாதிக் கலவரத்திற்கு முக்கிய காரணம். அவர்களைக் கண்டுபிடித்து முளையிலேயே அடக்கினாலேயொழிய சாதிக் கலவரங்கள் ஒழியாது என்றார்.

தொடர்ந்து மகாராஜா மனித குலம் அமைதியான வாழ்க்கையைத்தான் விரும்புகிறது. அவர்களுக்கிடையே இவ்வாறு சண்டையும் பூசலும் உண்டாகிறதெனில் அவர்களைத் தூண்டிவிடும் தீய சக்திகள் சில அவர்களிடையே ஒளிந்துள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து யாராக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றார்.

மந்திரியின் யோசனையைக் கேட்டு தெளிவடைந்த சக்திசேனர் மக்களிடையே முளைத்திருந்த தீய சக்திகள் என்னும் களைச் செடிகளை அகற்றினார். அதன்பின்னர் மகத ராஜ்யம் அமைதியாக இருந்தது.

# சிறையில் இருந்தபடியே ஆட்சியாளர்களை மிரளவைத்தவர் 'ஆங் சான் சூகி'...!

**மியான்மர் நாட்டில் இருந்து வந்திருக்கும் செய்தியைக் கேட்கும் போது சிலிர்ப்பாக இருக்கிறது. எந்த அதிகார வர்க்கம் அந்தப் பெண் மணியை வீட்டைவிட்டு வெளியில் வரக்கூடாது என்று தடைவிதித் ததோ... அதே பெண்மணி இன்று நாட்டுத் தலைவராக எழுந்து நிற்கி றார்.**

ஏறத்தாழ 20 ஆண்டு காலமாக வீட்டுச்சிறையில் இருந்த ஆங் சான் சூகி... இப்போது வெற்றித் தலைவி யாக வலம்வருகிறார்.

சூகியின் தந்தையான ஆங்சான், பிரிட்டிஷருக்கு எதிராக பர்மா ஆர்மியை உருவாக்கியவர். வரலாற் றுக் காலம் தொடங்கி சீனர்களும் மங்கோலியர்களும் சுரண்டிய மிச்ச மாக இருந்தாலும், இயற்கை வளத்துக்குப் பஞ்சமில்லாத நாடு பர்மா. பூமிக்கு மேலே, வைரம் பாய்ந்த தேக்கு மரங்கள் என்றால், பூமிக்குக் கீழே வைரங்கள். 1885 இல் பிரிட்டிஷாரின் காலனியாக, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த போதுதான், பிரிட்டனுக்கு எதிராகக் களத்தில் குதித்தார் கல்லூரி மாணவ ராக இருந்த ஆங்சான். இரண்டாம் உலகப் போர் நடந்த நேரம், கம்யூனிஸ் சித்தார்ந்தத்தை ஏற்றுக் கொண்டவராக இருந்தாலும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் போர்த்தந்திரத்தோடு பிரிட்டனை எதிரிக்க ஜப்பானின் உதவியை நாடினார். ஆங் சான் பிரிட்டனைத்

**நக்கீரன்**

துரத்தியதும் ஆட்சியை உங்களிடம் ஒப்படைப்போம் என்று சொல்லி இருந்தது ஜப்பான். ஆனால், அந்தப் போரில் ஜப்பான் அடிவாக்கியத்தால் சுதந்திரம் கிடைக்கவில்லை. பிரிட்டன் தன் காலனி ஆதிக்கத்தை விலக்கிக் கொள்ள முடிவெடுத்தபோது, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகியவற்றோடு பர்மாவும் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. *1947 இல் பர்மாவின் முதல் அதிபராக இருந்த நேரத்தில், எதிரிகளால் சுட்டுக்கொள்ளப்பட்டார் ஆங்சான்.* அப்போது ஆங் சான் சூகிக்கு வயது இரண்டு.

அப்பா பெயரான ஆங் சான், பாட்டியின் பெயரான சூ, அம்மாவின் பெயராக கின்கி... இந்த மூன்றையும்



இணைத்துக்கொண்டு ஆங் சான் சூகி ஆனார். ஆங் சான் சூகியின் தாய், பர்மாவுக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றியவர். அதனால் தன் மூன்றாவது வயதிலேயே தன் தாயுடன் இந்தியாவிற்கு வந்து சிம்லாவிலும் டெல்லியிலும் பள்ளிப்படிப்பை முடித்தார் சூகி.

அதன் பிறகு லண்டனில் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகிய வற்றைக் கல்லூரியில் முக்கிய பாடங்களாக முடித்தார். ஐ.நா.வில் மூன்று ஆண்டுகள் வேலை பார்த்தார். இந்தக் காலகட்டத்தில் மியான்மர் என்று பெயர் மாற்றப்பட்ட பர்மாவில் சர்வாதிகார ஆட்சி தொடங்கியது. 1942 க்குப் பிறகு கொடூரமாக நடந்து கொள்ளத் தொடங்கினார் அதிபர் நீ வின். பிரிட்டிஷ்காரனான மைக்கேல் ஏரிஸ்ஸை மணந்த ஆங் சான் சூகிக்கு இரண்டு மகன்கள். மூன்று வயதில் பர்மாவை விட்டுச் சென்ற சூகி, 1988 இல் தாய் நாட்டைப் பார்க்க... இல்லை இல்லை... உடல் நிலை சரியில்லாமல் இருந்த தாயை பார்க்க வந்த நேரத்தில் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. சூகிக்கு மட்டும் அனுமதி கொடுத்துவிட்டு கணவருக் கும் இரண்டு மகன்களுக்கும் குடி யுரிமைதர மறுத்தது இராணுவம் சர்வா திகார அரசாங்கத்தின் கொடுமையைக் கண்டு ஆத்திரம் அடைந்தார் சூகி.



அதே ஆண்டில் 8-வது மாதம் 8 ஆம் திகதி மியான்மரில் ஜனநாயகம் வேண்டி மிகப்பெரிய புரட்சி வெடித் தது. அந்த மகத்தான 8888 போராட் டத்தில் கலந்துகொண்டார் சூகி. அவருடைய வாழ்க் கையைப் புரட்டிப் போட்ட புரட்சி அது.

இராணுவத்தின் பிடி இறுகியது. சூகி யை வீட்டுச்சிறை யில் வைத்தது. 90 ஆம் ஆண்டில் அவரு டைய தேசியக் குடிய ரசுக் கழகத்தினர் மகத் தான வெற்றிபெற்ற போதிலும் அவரிடம் ஆட்சியை ஒப்படைக்காமல் வீட்டுச் சிறையிலேயே வைத்தது. 86 சதவிகித ஓட்டுடன் பெற்றிருந்த நிலையிலும், தேர்தலில் தில்லுமுல்லு நடந்து விட்டது என்று சொன்னது இராணு வம். இராணுவத்தின் அதிகாரத்துடன் நடந்த தேர்தல் வெற்றி குறித்து, இப்படி ஒரு காரணம் சொல்லப்பட் டதைக் கண்டு உலகமே அதிர்ந்தது. இது போதாது என்று தேர்தலில் வென்ற பலருக்கு 10 முதல் 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் கிடைத்தது.

அடுத்த ஆண்டு, சூகிக்கு அமை திக்கான நோபல் பரிசு கொடுக்கப் பட்டது. வீட்டில் இருந்த சூகிக்குப் பதிலாக, அவருடைய மூத்த மகன் அலெக்சாண்டர் நோபல் பரிசைப் பொற்றுக்கொண்டார். கணவர் கேன்சரால் பாதிக்கப்பட்டு, லண்ட னில் உயிருக்குப் போராடியபோதும் ஆங் சான் சூகிக்கு வீட்டுச் சிறையி லிருந்து விடுதலை கிடைக்கவில்லை. ஐ.நா. சபையின் கோபி அன்னான், போப் ஆண்டவர் போன்ற பலரும் வேண்டுகோள் விடுத்தும், சர்வாதிகார அரசு அசைந்து கொடுக்கவே இல்லை. கடைசிவரை சூகியைச் சந்திக்காம லேயே இறந்துபோனார் ஏரிஸ். அதன் பிறகு சூகி இங்கிலாந்து செல்வதற்கு திரும்பிவரக்கூடாது என்ற நிபந்தனை யுடன் அனுமதி கிடைத்தது. ஆனால், தாய் நாட்டை விட்டுப்போக மாட் டேன் என்று உறுதியுடன் மறுத்து விட்டார் சூகி. ஊழலுக்கு காரணம் அதிகாரம் அல்ல. அச்சமே. பதவியை இழந்து விடுவோமோ என்ற அச்சமே அதை அனுபவித்துக் கொண்டு இருப்பவர்களைச் சீர்குலைக்கிறது என்று சூகி உரத்துச் சொன்னது, உலக அளவில் கவனிக்கப்பட்டது.

## ஊழலுக்குக் காரணம் அதிகாரமல்ல பதவி போய்விடுமே என்ற அச்சம்!

மக்களுக்குத் தேவையானது என்ன என்பதை மிகக் கடைசியாக உணர்கிற விடயத்தில் அரசியல்வாதிகள் அடிக் கடி ஆச்சரியப்படுகிறார்கள் என்பது போன்ற ஆவேச வார்த்தைகளுக்குச் சொந்தக்காரராக இருந்தாலும், சூகி அவரது தந்தையைப் போன்று ஆயுதப்போராட்டத்துக்கு ஆதர வானவர் அல்ல. அவருடைய பாணி காந்தியப் பாதை. சிறையில் இருந்த படியே ஆட்சியாளர்களை மிரள வைத்த தரைவர்களில் மண்டேலா வுக்குப் பிறகு, ஆங் சான் சூகிக்கு முக்கிய இடமுண்டு. கடந்த திங்கட் கிழமை மியான்மரில் இடைத் தேர்தல் முடிவுகள் வெளியாயின. 44 தொகுதி



களுக்கு நடந்த தேர்தலில் 43 தோகுதிகளில் வென்றிருக்கிறது சூகியின் கட்சி. (கடந்த தேர்தலை அவர் புறக்கணித்து விட்டார்) இத்தனைக்கும் ஓட்டுப்போடப் போன மக்களுக்கு பல வகையில் அச்சுறுத்தல் கொடுத்தது அரசு. ஓட்டுப்போட்டதும் அழிப்பதற்கு வசதியாக, ஓட்டுச்சிட்டில் மெழுகி தடவி வைத்திருந்தது. இத்தனை திருவிளையாடல்கள் நடத்தியும் தோற்றுப் போனது அரசு. எல்லா வற்றையும் மீறி ஜனநாயகம் வெற்றி அடைந்திருக்கிறது. ஆனாலும், இன்னமும் அசைந்துகொடுக்காத இராணுவ ஆட்சியின் மீது அத்தனை நாடுகளும் கண்டனத்தைத் தெரிவிக் கின்றன. அதனால், உலக நாடுகள் மியான்மருக்குப் பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்து எச்சரி த்து இருக்கின்றன.

**மியான்மரில் சூகியை டாவ் என்று செல்லமாக அழைக்கிறார்கள். அதற்குத் தமிழ் அர்த்தம் அத்தை. மியான்மர் மக்களுக்கு அத்தையாகிப் போன சூகிக்கு இப்போது வயது 66. மியான்மர் மட்டுமின்றி உலக மக்களின் ஆதரவையும் அன்பையும் அளவுக்கு அதிகமாகவே பெற்று இருந்தாலும், இன்னமும் அவருக்கும் துணையாக இருப்பது ஒன்றே ஒன்றுதான் அதன் பெயர் தனிமை!**

## ஆசியாவிலேயே சிறந்த சுற்றுலாத்தளம் அமைக்கும் முயற்சியில் இலங்கை

(கொழும்பு)

சமாதானம் ஏற்பட்ட நிலையில் இலங்கையை மீண்டும் ஆசியா விலேயே சிறந்த சுற்றுலா தளமாக்கும் முயற்சியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியாக சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த வகையிலான 15 ஆயிரம் விடுதி அறைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் நான்கு வருட காலப்பகுதியினுள் மேலும் 35 ஆயிரம் விடுதி அறைகள் சுற்றுலாப் பயணிகளின் பாவனைக்கு தேவைப்படும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 25 இலட்சமாக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது. (அ-2)

## விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து

(கொழும்பு)

விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளுக்கு மிகவும் குறைவாக முதலீடு செய்யும் நாடுகளின் வரிசையிலேயே இலங்கை திகழ்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் 0.15 வீதமான தொகையை மட்டுமே முதலீடு செய்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் ஏனைய நாடுகள் ஒப்பீட்டளவில் அதிகளவு நிதியை ஆய்வுகளுக்காக ஒதுக்கீடு செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## புத்தாண்டு விழாக்களை மலையில் நடத்துவதில் அவதானம் தேவை

### வானிலை அவதான நிலையம்

(கொழும்பு)

புத்தாண்டு விழாக்களை மாலை வேளைகளில் நடத்துவது தொடர்பில்அவதானமாக நடந்து கொள்ள வேண்டுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் முழுவதிலும் மாலை வேளைகளில் சீரற்ற காலநிலை நிலவும் என வானிலை அவதான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. கடுமையான மழை, இடி, மின்னல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் எச்சிரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றங்களை கருத்திற் கொண்டு புத்தாண்டு தொடர்பான விழாக்கள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது ஆபத்துக்களை தவிர்க்க உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஆயுர்வேத வைத்தியர்களின் சேவைக்காலத்தை நீடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்ற ஆயுர்வேத வைத்தியர்களின் சேவையை நீடிப்பதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் இந்த வைத்தியர்களுக்கான ஆளனி வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வைத்திய சாலைகளில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக மாகாணசபை சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவை நிலவுகின்றதுடன் ஏற்கனவே சேவையிலுள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஆயுர்வேத வைத்தியர்களின் சேவையை ஒருவருட காலத்தால் நீடிப்பதற்கு கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது.(அ-2)




★ 1450-பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததன் மூலம் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுக்கு வந்தது.

★ 1755-சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகராதியை வெளியிட்டார்.

★ 1815-சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.

★ 1865-ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் இறந்தார். ஆன்ட்ரூ ஜோன்சன் அமெரிக்காவில் 17 ஆவது ஜனாதிபதியானார்.

★ 1892-ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.

★ 1912-இரண்டு மணி 40 நிமிடங்களுக்கு முன்னர் பனிப்பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் வட அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியதில் ஆயிரத்து 503 பேர் உயிரிழந்தனர்.

★ 1923-இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப் பட்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: நாசிப் படைகளினால் கைப்பற்றப்பட்டிருந்த நோர்வேயின் நார்விக் நகர் மீது கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் 200 போர் விமானங்கள் வட அயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகர் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★ 1943-கூட்டுப் படைகளின் போர் விமானம் ஒன்றில் இருந்து மினேர்வா தானுந்து தொழிற்சாலை மீது வீசப்பட்ட குண்டு குறி தவறி பெல்ஜியத்தின் மோர்ட்செல் நகர் மீது வீழ்ந்ததில் 936 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர் ஜேர்மனியில் நாசிகளின் பேர்ஜேன்-பெல்சன் வதை முகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.

★ 1986-லிபியா மீது ஐக்கிய அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தியது.

★ 1989-இங்கிலாந்தின் ஹில்ஸ்பரோ காற்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 96 பேர் உயிரிழந்தனர்.

★ 1989-சீனாவில் தியனன்மென் சதுக்க ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

★ 1997-மக்காவில் ஹ்ஜ் பயணிகளின் முகாம் ஒன்றில் தீப்பற்றியதில் 341 பேர் உயிரிழந்தனர்.

★ 2002-ஏர் சீனாவின் போயிங் விமானம் தென் கொரியாவில் வீழ்ந்ததில் 128 பேர் உயிரிழந்தனர்.

★ 1976-தமிழ் நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1452-லியனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர் (இ.1519)

★ 1707-லியோனார்டு ஆய்லர், சுவிட்சர்லாந்து நாட்டின் கணிதவியலாளர் (இ.1783)


★ 1874-ஜொகான்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1957)

★ 1896-நிக்கொலாய் செமியோனொவ், நோபல் பரிசு பெற்ற ரசியர் (இ.1986)

★ 1907-நிக்கலாஸ் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர் (இ.1988)

### இறப்பு

★ 1980-ஜீன் போல் சார்ட்டெர், நோபல் பரிசினை ஏற்க மறுத்த பிரெஞ்சு மெய்யியலாளர் (பி.1905)



★ 1865-ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் நினைவு தினம் (பி.1809)

# 'நந்தன' புதுவருட இராசி பலன்கள்



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம், 1ஆம் பாதம்**

### கன்னிச் சனி விலகியதும் காரிய வெற்றி தேடி வரும்!

### விடாமுயற்சியால் வெற்றி தேவுதையை வரவழைத்துக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!

*கர* வருடம் முடிந்து *நந்தன* புத்தாண்டு தொடங்குகிறது. வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசியைப் பார்க்கும் குரு வைகாசிக்கு மேல் பத்தாமிடத்தில் அல்லவா சஞ்சரிக்கப் போகிறார். எனவே, வந்த குரு எந்தளவுக்கு நன்மைகளை வழங்கும்? வருடத் தொடக்கத்தில் வரும் மகிழ்ச்சி வருடக்கடைசிவரை இருக்குமா? என்றெல்லாம் உங்கள் மனதில் எண்ணங்கள் மலர்ந்து கொண்டே இருக்கும்.

உங்கள் இராசியைப் பொறுத்த வரை உத்தராடம் நட்சத்திரத்தில் சூரியன் காலில் பிறக்கும் இந்த ஆண்டு சுபீட்சத்தை அள்ளி வழங்கப் போகிறது.

வருடத் தொடக்கத்தில் யோகக் காரகன் செவ்வாய் உங்கள் இநாசியிலேயே சஞ்சரிக்கிறார். 2 இல் சனியும், 10 இல் கேதுவும் பிரபுத்துவ யோகத்தை வழங்கும். அரசியல் அனுகூலமும், அடுத்தவர்களின் ஒத்துழைப்பும் குறைவின்றி இருப்பதால், புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்லும் வாய்ப்பும், புதிய பொறுப்புகள் வந்து சேரும் அமைப்பும் உருவாகும்.

செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் மட்டும் எதையும் நிதானித் துச் செய்வது நல்லது. உறவினர் பகை உருவர்காமல் இருக்க, விட்டுக் கொடுத்து செல்லவேண்டும். சிலருக்கு உதவி செய்யப்போய் அது உபத்திரவத்தில் முடியலாம். கூட்டணிகள் விலக நேரிடும்.

இருப்பினும், தன்னம்பிக்கையும், தைரியமும் மிக்க நீங்கள் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க வாய்ப்பிருக்கும் பொழுதெல்லாம் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்..

உங்களுக்கு இந்த நந்தன புத்தாண்டு எப்படி இருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3வரை!**

ஆண்டின் தொடக்கத்தில் குரு மங்கள யோகமும் குரு சந்திர யோகமும் ஏற்படுகிறது. விலகிய ஏழரைச் சனி மீண்டும் வக்ர இயக்கத்தில் குடும்பச்சனியாக சஞ்சரிக்கிறது. பத்தில் கேது, சுக்கிரனுடன் கூடி பலம் பெறுகிறரர்.

எனவே, தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். தொகை வரவில் இருந்து குழப்பங்கள் அகலும். ஆரோக்கியத்திற்காக சிறிது தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம்.

வீடு கட்டும் முயற்சியில் அல்லது வீடுவாங்கும் முயற்சியில் அனுகூலம் உண்டாகும். தன்னம்பிக்கையும், உற்சாகமும் குடிகொள்ள தானாகவே பதவிகள் வந்துசேரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**பதவி மாற்றம் தருமா, குருப் பெயர்ச்சி?**

நவக்கிரகங்களில் நற்பலன்களைப் பார்வையாலேயே வழங்கும் கிரகம் குரு. அந்தக் குரு அசுர குரு வீட்டில் சஞ்சரித்து, அதன் ஆற்றல் மிக்க பார்வையை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் செலுத்துகிறது. பார்வை படும் இடமெல்லாம் பல்ன்கள் அபரிமிதமாக நடைபெறும்.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு பதவி மாற்றங்களைக்கொடுக்குமா? என்று நீங்கள் நினைக்கலாம். பொதுவாக, 5, 8 க்கு அதிபதியான குரு 10 இல் சஞ்சரிக்கும் பொழுது, தொழிலில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களை நம்பி பொறுப்புக்களை ஒப்படைக்கும் பொழுது, யோசித்து செய்வது நல்லது. இட

**சிவல்புரி சிங்காரம்**

மாற்றம், ஊர்மாற்றம், இலாகாமாற்றம் போன்று ஏதேனும் ஒரு மாற்றம் வந்து சேரலாம்.

அது மட்டுமல்லாமல், பத்தாடமிடத்து குருவிற்கு பரிகாரம் அவசியம் செய்யவேண்டும். முத்தான குரு புத்தாண்டில் பலன்தர குரு கவசம் பாடி குருவை வழிபாடுசெய்யுங்கள்.

உங்கள் இராசிக்கு 10 இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடத்து ஆதிபத்தியங்கள் எல்லாம் படிப்படியாக நடைபெறப்போகின்றது. வாக்கு, தனம், குடும்பம், தாய், எதிர்ப்பு, வாகனம், வழக்கு, கடன்சுமை ஆகியவற்றை பற்றிய சிந்தனைகளில் எல்லாம் நீங்கள் நினைத்தது போலவே நல்ல பலன்கள் கிடைக்கப் போகிறது. குடும்பத்தில் ஒற்றுமை கூடும். தாயின் உடல்நலம் சீராகும். இடம், பூமி வாங்கும் யோகம் ஏற்படும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். கடிதம் கனிந்த தகவலைத் தரும். எதிரிகள் சரணடைவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கடன்சுமை குறைந்து, கவலைகள் தீர்ந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள்.

**செவ்வாய் சனி சேர்க்கை காலம்!**

ஆனி 9 முதல் ஆடி 29 வரை கன்னி இராசியில் செவ்வாயும் சனியும் சேருகின்றன. வாக்கு ஸ்தானத்தில் இவை கூடுவதால் எதையும் யோசித்து சொல்வது நல்லது. கோபத்தைக் குறைத்துக்கொள்வதும் நல்லது.

விரயங்கள் அதிகரிக்கும். வாகன மாற்றம், இடம்மாற்றம், வீடுமாற்றங்கள் திடீர் மாற்றங்களாக வந்துசேரும். அங்காரக வழிபாடும், அனுசரிக்கும் தன்மையுமே இக்காலத்தைப் பொற்காலமாக்கும்.

**துயரங்களை போக்குமா துலாம் இராசிச்சனி?**

ஆவணி 27 ஆம் திகதி முதல் துலாம் இராசிக்கு உச்சம்பெறும் சனி உங்களுக்கு மிகுந்த நன்மைகளை வழங்கும். ஏழரைச்சனியின் பிடியில் இருந்து நீங்கள் முழுமையாக விலகப் போகிறீர்கள். எனவே, தொட்ட காரியங்கள் வெற்றிபெறும்.

துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிச் செய்திகள் அடுக்கடுக்காக வந்து சேரும். வீடுவாங்கும் யோகம் முதல், வியக்கும் விதத்தில் பதவிகள் அமையும் யோகம்வரை ஒவ்வொன்றாக செயற்படும்.

**வக்ர குரு வரவைக் கொடுக்குமா? செலவைக் கொடுக்குமா?**

புரட்டாதி 26 ஆம்திகதி முதல் தை 24 திகதி வரை இடபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசியை பொறுத்தவரை 5, 8 க்கு அதிபதியாக குரு விளங்குவதால் நன்மை, தீமைகள் இரண்டும் கலந்தே நடக்கும்.

எட்டுக்கு அதிபதி வக்ரம் பெறுவதால், இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும். அதேநேரத்தில் 5 க்கு அதிபதி வக்ரம் பெறுவதால், பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். பொதுவாக குரு, வழிபாட்டில் முறையாக ஆர்வம் காட்டினால், குழப்பங்களில் இருந்து விடுபட இயலும்.

**பாம்புக்கிரக பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம் திகதி துலாம் இராசியில் இராகுவும், மேஷ இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இந்த கிரக பெயர்ச்சி உங்களுக்கு யோகம்தரும் பெயர்ச்சிதான். உங்கள் இராசிக்கு மூன்றில் இராகுவும், ஒன்பதில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். மூன்றாமிடத்து இராகு வெற்றியைக் கொடுக்கும். முக்கிய புள்ளிகளைச் சந்தித்து எடுக்கும் முடிவுகள் ஒவ்வொன்றையும் செயற்படுத்திப் பார்ப்பீர்கள்.

ஒன்பதாமிடத்தில் கேது சஞ்சரிக்க போவதால், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். கோவில் திருப்பணிகள் செய்யும் சூழ்நிலை உருவாகும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள். பிரியங்கள் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது. உற்றார், உறவினர்களின் அனுசரிப்பு இக்காலத்தில் தேவை.

உங்களுக்கு அனுகூலம் தரும் சர்ப்ப ஸ்தலங்களில் முறையாக சர்ப்பசாந்திகளைச் செய்தால், முன்னேற்றங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1 ஆம் திகதி முதல் ஆனி 6 ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம்திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் சனி 6, 7 க்கு அதிபதியாக விளங்குகிறார். 6க்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம்தான். கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப எதிர்பாராத விதத்தில் சில நன்மைகள் ஏற்படும். எதிரிகள் விலகுவார். உதிரி வருமானங்கள் பெருகும். உத்யோகம். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கிடைத்து ஊதிய உயர்வும் சலுகையும் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். மருத்துவ செலவு குறையும்.

ஏழுக்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால், குடும்பத்தில் சில குழப்பங்கள் உருவாகலாம். மூன்றாம் நபரின் பேச்சைக் கேட்டு, குடும்பப் பிரச்சினைகளை வளர்த்துக்கொள்ளாதீர்கள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலமும் சில பிரச்சினைகள் உருவாகலாம். எனவே, வீடு சம்பந்தப்பட்ட காரியங்களில் முடிவெடுக்கும்போது, குடும்ப பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வதோடு, சனிக்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ஞாயிற்றுக்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று சூரிய பகவானை வழிபட்டு வருவது நல்லது. புகழ், கீர்த்தி மேலோங்கும்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1 ஆம் திகதி முதல் ஆனி 6 ஆம்திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம் திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் சனி 6, 7க்கு அதிபதியாக விளங்குகிறார். 6க்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம்தான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப எதிர்பாரா விதத்தில் சில நன்மைகள் ஏற்படும். எதிரிகள் விலகுவர். உதிரி வருமானங்கள் பெருகும். உத்யோகம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கிடைத்து, ஊதிய உயர்வும், சலுகையும் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். மருத்துவச் செலவு குறையும்.

ஏழுக்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால், குடும்பத்தில் சில




குழப்பங்கள் உருவாகலாம். மூன்றாம் நபரின் பேச்சை கேட்டு, குடும்ப பிரச்சினைகளை வளர்த்துக்கொள்ளாதீர்கள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலமும் சில பிரச்சினைகள் உருவாகலாம். எனவே, வீடு சம்பந்தப்பட்ட காரியங்களில் முடிவெடுக்கும்போது, குடும்பப் பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வதோடு, சனிக்குரிய சிறப்பு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

## இந்த ஆண்டு, சுபீட்சத்தை அள்ளி வழங்கப்போகிறது

# டேவிட் கமரூன்- சூகி சந்தித்துப் பேச்சு



மியன்மார் சென்றிருந்த இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் அந்நாட்டின் எதிர்க்கட்சி தலைவரான ஆங் சாங் சூகியை சந்தித்து பேசியுள்ளார்.

அண்மையில் மியன்மாரில் நடந்த 45 நாடாளுமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலில் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக கட்சி அபார வெற்றி பெற்றது.

இதனையடுத்து அந்நாட்டில் ஜனநாயகம் மலரும் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் மியன்மார் சென்றிருந்த இங்கிலாந்து பிரதமர் சூகியை சந்தித்து பேசினார்.

இதற்கு முன்னதாக அந்நாட்டு ஜனாதிபதி தீன் செயினை சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து பிரதமர் மியன்மார் சென்றது இதுவே முதன் முறையாகும். (அ-2)

# நைஜீரியாவில் பிறந்த 70 ஆயிரம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. பாதிப்பு

(நைஜீரியா)

எண்ணெய் வளம் மிக்க நைஜீரியாவில் புதிதாக பிறந்த 70 ஆயிரத்திற்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நாட்டில் சமீபத்தில் தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு மையம் நடத்திய ஆய்வில் தென்கிழக்கு மாகாணங்களான ஒகூன்,ஈடோகோ ஆகிய பகுதிகளில் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருந்துள் ளது. அதுமட்டுமின்றி கர்ப்பமான பெண்கள் சிலரை பரிசோதித்தத்தில் அவர்களுக்கும். எச்.ஐ.வி. பாதிப்புக்கள் பெருமளவு இருந்துள்ளன.

இதைத் தொடர்ந்து அப்பகுதிகளில் கடந்த சில மாதங்களாக ஆய்வு மேற்கொண்டதில் 70 ஆயிரத்திற்கும் அதிகமான பிறந்த குழந்தைகளுக்கும் எச். ஐ.வி பாதிப்பு உள்ளதாக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இவற்றை தவிர போதிய மருந்து வசதியின்றி பெண்கள், குழந்தைகளுக்கு காசநோய், மலேரியா உள்ளிட்ட நோய்களால் அதிகளவு பாதிக்கப்பட்டு இருந்தது தெரிய வந்துள்ளது.

இது குறித்து தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு மையத்தின் பொது இயக்குநர் ஜான் இடோகோ கூறியதாவது,

தாய் வழியாக எச்.ஐ.வி நோய்க்கு ஆளான குழந்தைகள் நிலவரம் குறித்து புள்ளி விபரம் சேகரிக்கப்பட்டது. அதில் எச். ஐ.வி யால் 70 ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது.

இதனையடுத்து எச்.ஐ.வி , எயிட்ஸ், எலும்புருக்கி, மலேரியாபோன்ற உயிர்கொல்லி நோய்கள் தாக்கிய பெண்களிடம் இருந்து பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு இந்நோய்கள் பரவுவதை குறைக்க கடும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

அதற்காக அரசு மற்றும் பல்வேறு தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து தீவிரமாக செயற்பட தயாராக உள்ளோம். மேலும் நோய்த்தாக்குதலை தடுத்து நாட்டு மக்களின் சுகாதாரத்தை பேணுவதற்கான அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்கின்றது என்றார்.

**உலக வங்கி நிதி வழங்கியது**

நைஜீரியாவில் எயிட்சை ஒழிக்க 255 மில்லியன் டொலர் நிதி வழங்கியுள்ளது.

உலக சுகாதார கணக்கின் படி இங்கு நகர பகுதிகளை விட கிராம பகுதிகளில் தான் இந்த எயிட்ஸ் அதிகம் பரவுவதாகவும் இதன் கொடூரத்தை புரிய வைக்கவும் தீவிர பிரசாரம் ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# பாக்.எல்லையில் திடீர் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும்

## அமெரிக்காவிற்கு நிபந்தனை விதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் பாகிஸ்தான் எல்லையில் பதுங்கி உள்ள தீவிரவாதிகளை குறிவைத்து ஆளில்லாத உளவு விமானங்கள் மூலம் திடீர் தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என அமெரிக்காவுக்கு பாகிஸ்தான நிபந்தனை விதித்துள்ளது.

இந்நிலையில் கடந்தாண்டு நவம்பர் மாதம் நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனால் பாகிஸ்தான்- அமெரிக்க உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது.

இதனால் அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்லும் வழியை பாகிஸ்தான் மூடியது.

இந்நிலையில் பாகிஸ்தான் பாதுகாப்பு விவகாரங்களுக்கான நாடாளுமன்ற குழு அளித்திருந்த 14 பரிந்துரைகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது.


சில திருத்தங்களுடன் புதிய விதிமுறைகளுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது.

அமெரிக்காவுடன் மீண்டும் உறவை தொடரவும் நேட்டோ படையினருக்கு பொருட்கள் எடுத்துச் செல்வதற்கான வழியை திறந்து விடவும் புதிய விதிமுறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.'

மேலும் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் மீது அத்துமீறி தாக்குதல் நடத்துவதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அதில்நிபந்தனைவிதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலந்த் கூறுகையில்,

பாகிஸ்தானின் முடிபை வரவேற்கின்றோம். இருதரப்பு உறவை தொடர்ந்து குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். அதே நேரம் ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்படுத்தும் முயற்சிக்கும் பாக். ஆதரவு அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)



ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு வீதி வசதியை பயன்படுத்த அதிகாரபூர்வமற்ற அனுமதியை பாக். அரசு வழங்கியது. இதனை கண்டித்து நேட்டோ நாடுகளின் கொடியை எரித்து தங்களது எதிர்ப்பை எல்லைப்பகுதி மக்கள் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.




# சிரியா போர்நிறுத்தம்; இந்தியா வரவேற்பு

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த ஒரு வருடமாக நடந்து வந்த போராட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இதனையடுத்து சிரியா நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் இதனை அமுலுக்கு கொண்டு வந்தது.

ஹோம்ஸ், ஹமா, இட்லிப் ஆகிய நகரங்களில் குவிக்கப்பட்டிருந்த இராணுவம் தற்போது வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அங்கு தினசரி ஒலித்துக் கொண்டிருந்த துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் போராட்டக்காரர்கள் கையெழுத்திடவில்லை..

எனவே அவர்கள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரண் அடைய வேண்டும் என சிரிய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

துருக்கியில் 25 ஆயிரம் பேரும் ஜோர்தானில் 8 ஆயிரம் பேரும் லெபனானில் 16 ஆயிரம் பேரும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் நாடு திரும்பும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர உள்நாட்டில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்களும் பயமின்றி தங்கள் வீடுகளில் தங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து தற்போது சிரியாவில் அமைதி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த போர் நிறுத்தத்திற்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

கோபி அனான் தலைமையிலான குழு சிரியாவில் அமைதியை கொண்டுவர மேலும் பல சிறப்பான செய்ற்பாடுகளை மேற்கொள்ளும் என இந்தியா தெரிவித்துள்ளது. (அ-2)

# இந்தோ.வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிப்பு

இந்தோனேஷியாவில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியான நபர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.



இந்தோனேஷியாவில் கடந்த 11 ஆம் திகதி 8.6 ரிக்டர் அளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இத்னையடுத்து 28 நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின் வாபஸ் பெறப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தில் 5 பேர் பலியாகினர், 7 பேர் படுகாயமடைந்தனர். இந்தநிலையில் தற்போது பலியானோரின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. (அ-2)

# தென்சீனக்கடலில் இராணுவக் கூட்டுப்பயிற்சி

சீனா தனக்கு சொந்தம் கொண்டாடும் தென் சீனக் கடல் பகுதியில் அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இருநாட்டு இராணுவத்தினரும் ஆண்டுதோறும் இந்த பயிற்சி மேற்கொள்வார்கள். ஆனால் இந்த ஆண்டு இந்தப் பயிற்சி தென்சீன கடல் பகுதியில் நடைபெறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது. அமெரிக்கா தரப்பில் 4 ஆயிரத்து 500 வீரர்களும், பிலிப்பைன்ஸ் தரப்பில் 2 ஆயிரத்து300 வீரர்களும் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சி குறித்து பிலிப்பைன்ஸ் நாட்டின் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், எந்த நாட்டுக்கு எதிராகவும் பயிற்சியில் ஈடுபடவில்லை. கடல்பகுதியில் பாதுகாப்பு மற்றும் இருநாட்டு நலன் கருதி இராணுவ பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக கூறினார். (அ-2)


இயற்கை பண்பாட்டு மரபுவகை பாதுகாப்பு மையத்தினால் வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சூழலியலாளர் ஐங்கரநேசன் ஆகியோர் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதையும் துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# சோமாலியக் கொள்ளையர்களால் கடத்தப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## உறவினர்கள் முறையீடு

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பலில் கடமையாற்றும் சிப்பாயை விடுதலை செய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு அவரது உறவினர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையைச்சேர்ந்த கப்பல் சிப்பாய் சரத் சுரசேன என்பவர் 14 மாதங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டுள்ளார்.

டுபாய் கப்பல் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான் எம்.வீ.ஓர்னா என்ற கப்பல் ஆபிரிக்காவிலிருந்து சீனா நோக்கிப் பயணிக்கும் போது சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இதன்போது சுரசேன உட்பட 19 சிப்பாய்கள் கப்பலில் இருந்துள்ளனர்.

தனது சகோதரனை விடுதலை செய்து கொள்வது தொடர்பாக இதுவரை அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என சுரசேனவின் சகோதரர் நிஹால் சுரசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த இலங்கைப் பிரஜையைவிடுதலை செய்து கொள்வது குறித்துக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக டுபாயிலுள்ள இலங்கைக்கான தூதுவர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்கான மாபெரும் கலை விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இக்கலைவிழாவில் மங்கல இசை, நாடகம், இன்னிசைக்கானங்கள், நாட்டியாஞ்சலி, நாட்டுக்கூத்து என்பனவும் நடைபெறவுள்ளன. (அ-9)

# நாட்டின் இறைமையை பாதுகாக்க படையினர் ஒத்துழைக்க வேண்டும்

## புத்தாண்டுவாழ்த்துச்செய்தியில் இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இறைமையை பாதுகாக்க படையினர் தொடர்ச்சியாக ஒத்துழைக்க வேண்டுமென இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் நன்மதிப்பை சீர் குலைக்கும் முனைப்புக்களில் பல்வேறு தரப்பினர் முயற்சித்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச சமூகத்தினால் நாட்டின் இறைமைக்கு விடுக்கப்பட்டு வரும் சவால்களை முறியடிப்பதற்கு படையினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானத்துடன் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அடுத்த சவால் எனவும் அதற்கும் படையினர் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தினர் இலங்கைக்கு எதிராக மேற்கொண்ட பல சதி முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார். (அ-2)

# எரிமலை உள்ளத்தை உருவாக்கியவர் பிரபா

## கொளத்தூர் மணி உரை



தேசியத் தலைவர் பிரபாகரனின் தோற்றத்தை வைத்து எதுவும் அறியமுடியாது. எல்லோருக்குள்ளும் ஒரு எரிமலை உள்ளத்தை உருவாக்கியவர் பிரபாகரன் என கொளத்தூர் மணி தெரிவித்துள்ளார்.

பழநெடுமாறன் எழுதிய பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை சென்னையிலுள்ள சர்.பிடி தியாகராயர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொளத்தூர் மணி உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் புலிகளின் பனங்கொட்டை கைக்குண்டு, பன்றிக்குட்டி வெடிகுண்டுகள் பற்றியும் 1980 களிலேயே விமானத்தை உருவாக்கிய புலிகளை நேரில் பார்த்ததையும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாழ்க்கைப்பயணம் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முருகேசு ரவீந்திரனின் வாழ்க்கைப் பயணம் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர் த. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் சிறப்புரையினை யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரியர் ந.சத்தியபாலன், நூல் அறிமுக உரையினை யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் கா. சசிதரன், வெளியீட்டுரையினை யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியர் பாலசிங்கம் சண்முகநாதன், நூல் ஆய்வினை யாழ். கல்வி வலய தமிழ்த்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை கல்விக் காருண்யன் மனிதநேய ஈகையாளன் லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொள்வார்.

அத்துடன் ஓவியர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ-9)



தள்ளா விளையுளும் தக்க[illegible]ழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மானிப்பாய் பொலிஸாரின் அனுசரணையுடன் சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கமும் சங்கானை மக்கள் விழிப்புக்குழுவும் இணைந்து மாபெரும் விளையாட்டு விழா-2012 இனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் முழுநாள் நிகழ் வாக சங்கானைக் கூடத்து மனோன் மணி அம்பாள் மைதானத்தில் சங் கானை வர்த்தகர் கைத்தொழில் உரி மையாளர் சங்கத் தலைவர் ச.சாம்ப சிவம் தலைமையில் நடாத்தவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபசிங்க பண்டார, சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன், வலி.தென்மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளீதரன், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.மலகொல்ம் பேட், சங்கானை அரசினர் வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் ரி.சம்பந்தமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்டியாளர்களை சங்கானை வர்த்தக சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (அ-9)

## நல்லாட்சி ஏற்பட்டாலன்றி ஊழலை ஒழிக்க முடியாது

அரசாட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு வள்ளுவனின் குறள்பாக்களை விட் வேறு எதையும் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அந்த அளவிற்கு அரசாட்சி பற்றி வள்ளுவன் அருமையாக கூறியுள்ளான்.

அரசு என்பது மக்களுக்கானது.

ஆள்பவன் மக்களின் தேவையறிந்து அவர்களின் மனம் அறிந்து தன் அரசாட்சியை செய்ய வேண்டும். அப்போதுதான் நாடு சிறக்கும்.

மக்கள் எக்குறையும் இன்றி வாழ்வார்கள்.

அரசு பிழைக்கின்றபோது நாடு தனது வளத்தை இழக்கிறது. அதனால் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிப்பர்.

இத்தகைய் நிலைமை அரசாட்சியில் இருந்துதான் ஆரம்பமாகிறது.

அரசு அறத்துடன் சட்ட திட்டங்களை முறையாக அமுல்படுத்தும்போது, அங்கு இயல்பாகவே நீதி நிலை நாட்டப்படும்.

மாறாக மக்கள் பற்றி அரசு எந்தவித கவலையும் கொள்ளாமல், தான் நினைத்ததே சரியென்று நடக்கும்போது நாட்டில் சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன சீர்குலைகின்றன.

அதனால் கொலையும் கொள்ளையும் களவும், பலாத்காரமும், கடத்தலும், காணாமல் போதலும் மலிந்து போகும்.

சட்டத்தை, நீதியை ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்று நியாயபூர்வமாக நினைக்கின்றவர்கள் அது விடயத்தில் தோல்வி அடைவர்.

அதேநேரம் சட்டத்தை சீர்குலைப்பவர்கள், செல்வாக்கை பயன்படுத்துபவர்கள், பந்தம் பிடிப்பவர்கள் மேலோங்குவர். இதன் முடிபு மிகப் பாரதூரமான அழிவாக இருக்கும்.

இப்போது எங்கள் நாட்டின் அரசாட்சியில் ஊழலும், சொத்துச் சேகரித்தலும், செல்வாக்கும் எங்கும் மேலோங்கி நிற்பதைக் காண முடிகின்றது.

ஒருகாலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் தங்கள் சொத்துக்களை இழந்தனர். அரசியலுக்காக அவர்கள் தங்களிடம் இருந்த செல்வத்தை தியாகம் செய்தனர்.

ஆனால், இன்று நிலைமை அதுவன்று.

சொத்துச் சேகரிக்க வேண்டுமாயின் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதாக நிலைமை மாறிவிட்டது.

சொத்துச் சேகரிப்பதை நினைப்பாகக் கொண்டு அரசியலில் ஈடுபடுவது அல்லது அரசியலில் ஈடுபட்ட பின்பு சொத்து சேகரிக்க நினைப்பது ஆகிய விடயங்கள் மக்களுக்கான சேவையை மறைக்கச் செய்யும். ஊழலை ஊக்குவிக்கும்.

பந்தம் பிடிப்பவர்கள் சுயமாக அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவர். இவற்றால் பொதுமக்கள் பெரும் துன்பத்தை அனுபவிப்பர்.

எனவே நேர்மை, நீதி, தர்மம், உண்மை என்ற தூண்களைக் கொண்டு அரசு அமைக்கப்பட்டால் அன்றி மேற்கூறிய ஊழலைத் தடுப்பது முடியாத காரியம்.

அரசு ஒழுங்காக இருக்கின்றபோதுதான் நல்லாட்சி அமையும்.

ஆகவே நல்லாட்சி ஏற்பட வேண்டுமாயின் மக்கள் விழிப்படைய வேண்டும்.

## புத்தாண்டு விபத்து 4 வீதத்தால் உயர்வு

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தன்று 24 மணி நேரத்தில் ஏற்பட்ட விபத்துச் சம்பவங்கள், கடந்த ஆண்டை விட 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 223 நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த வைத்தியசாலை தகவல்கள், கடந்த ஆண்டில் 106 நோயாளிகள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர் என்றும் வைத்தியசாலை தகவல் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (எ-11)

## சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

தமிழ்-சிங்களப் புத்தாண்டு தினத்தை கொண்டாடும் முகமாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினரால் மாபெரும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் நாவலடி அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் இன்று இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் அதிகாலை 6 மணிக்கு கொடிகாமம் நகரில் இருந்து ஆரம்பிக்கும் எனவும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (அ-3-29)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பழைய மாணவர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-3-29)


## கதைநேரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொதுநூலகத்தின் சிறுவர்களுக்கான கதைக்கள நேரம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் முப்பது



அஞ்செ முத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீங்குதல் இன்பமே
நியம் நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்ச மென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே!
ஆண்மை சேர்குரு புங்கவ் சிங்கமே!

## அமைதியின் தூதர்களாக வாழ முற்படுவோம்

மனிதம் வாழவேண்டும், அதுவும் முழுமையாக வாழவேண்டும், குறைவில்லாமல் வாழவேண்டும், மதிப்போடு வாழவேண்டும், மாண்போடு வாழவேண்டும். இதன்மூலம் இவ்வுலகிலே புனிதம் பிரதிபலிக்கவேண்டும் என்பதுதான் மனிதனைப் படைத்த இறைவனின் நோக்கமாகும். ஆனால் மனிதம் இன்று சிதைக்கப்படுகிறது, சீரழிக்கப்படுகிறது, முழு மனிதர்களாக வாழ்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன. இன்று இந்த புண்ணிய பூமி புழுதியின் பூமியாக மாறிக் கொண்டு வருகிறது. ஏற்கனவே இரண்டு உலகப் போர்கள் மனித குலத்தை குலைநடுங்கச் செய்துவிட்டன. ஆறாத காயங்களை ஏற்படுத்திவிட்டன. இந்நிலையில் இன்னொரு உலகப்போர் என்றால் இனி இப்புண்ணிய பூமியில் மனிதர்கள் இருக்கமாட்டார்கள்.

இதோ அந்த உயிர்த்த ஆண்டவர் இன்று நற்செய்தியின் வழியாக நமக்குத் தருவது சமாதானம், 'அமைதி, உயிர்த்த ஆண்டவர் தன் சீடர்களுக்குத் தோன்றி முதன்முதலாக அறிவித்த செய்தி சமாதானம்.


சமாதானம் என்பது தேடல் அல்ல. அது ஒரு சுய உணர்வின் தரிசனம் என்றால் மிகையாகாது. அதை ஏனையவருக்குஏற்படுத்தும் உண்மைநிலையே ஒருமைப்பாடு எனப்படும். ஆனால் இன்று எமது சமுதாயத்தில் சமாதானம் உணர்ந்தறியப்படுவதில்லை. உண்மைகளைப் பேசமுடியாத போலி நிலை. பேசுபவர்கள் தமது உண்மையான மனநிலைக்கு மாறாக தமது கட்சி அரசியலையும் தங்கள் சொந்த எதிர்பார்ப்பையும் நிறைவுசெய்வதே சமாதானம் என ஒரு குறுகிய் வட்டத்திற்குள் நின்று பேசுகிறார்கள்.

இன்றைய உலகிற்கு அமைதி தேவை

### பரமபிதா காட்டிய பாதை

வெறும் புழுதிகளும் பாலைவனங்களும்தான் காட்சிதரும். இவைகளுக்கு மாற்று மதிப்பீட்டைக் கொடுத்து, அவற்றை மண்ணில் வாழ்ந்து காட்டியவர் நம் ஆண்டவர் இயேசு. அவர்தான் அமைதியின் ஊற்று, அமைதிப் புறா, அமைதியின் தேவன், இன்று அவர் உயிர்த்த ஆண்டவர். உயிர்ப்பு என்றாலே அங்கே வெற்றி, மகிழ்ச்சி, அமைதி. ஆம், இயேசு தம் உயிர்ப்பின் மூலம் வன்முறையை வென்றார், ஆணவத்தை வென்றார், பகைமையை வென்றார், துன்பத்தை வென்றார்.

என்றால் அந்த அமைதி இயேசுவிடம் இருந்துதான் வரும். அவர்தான் அமைதியின் ஊற்று. இந்த அமைதியின் ஊற்று ஆவியானவரின் வடிவில் நமக்கு அருளப்படுகிறது. காரணம் இந்த ஆவிதான் உயிர்த்த ஆண்டவருக்குள் இருந்து செயற்படுகின்றவர். அந்த ஆவியைத்தான் இயேசு திருத்தூதர்களுக்குள் ஊதி அதைக் கொடையாகப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியதாக நற்செய்தியில் படிக்கின்றோம். அப்படியென்றால் இந்த அமைதி யாருக்கு? உலகம் முழுமைக்கும் எங்கெங்கு வன்முறைகள், அநீதிகள், பழைமை வாதங்கள், போராட்டங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் ஆண்டவர் தரும் அமைதி எடுத்துச் சொல்லப்படவேண்டும் என்றுதான் இயேசு தன் சீடர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றார். அதே கட்டளையை இன்று இயேசு எமக்கும் பணிக்கின்றார்.



எனவே நாம் எல்லோரும் நிறைவு தரும் மனித உறவுகளுக்கு உறுதுணையாய் இருக்கிற, இயற்கையோடு இணைந்து வாழ்ந்து சுற்றுப்புறச் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் மனநிலையை வளர்க்கிற, பல்சமய மக்களுடன் சமூக நீதியை நிலை நாட்டுகிற சமதர்ம சமுதாயத்திற்கு வடிகாலாய் அமைகிற கருவூலமாகத் திகழவேண்டும். விழிப்புணர்வும் விடுதலை வேட்கையும் செயற்றிறனும் சமுதாயக் கோட்பாடும் உரிமைகளை மதிக்கின்ற மனப்பக்குவமும் எம்மில் உண்டாகி நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

அருட்சகோதரர் றமேஸ் அ.ம.தி

நாம் எம்மைப்போல் மற்றவர்களுடைய உரிமைகளை மதிக்கின்றபோது அதுவே சமாதானத்துக்கு வழிவகுக்கும்.

# பாகிஸ்தானிலிருந்து முதலீடு பெறுவதற்கு இந்தியா கொள்கை அளவில் ஒப்புதல்

(மும்பை)


பாகிஸ்தானிலிருந்து முதலீடுகளை ஏற்க இந்தியா கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. டில்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவுவெடுக்கப்பட்டது.

மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா, பாகிஸ்தானின் வர்த்தக அமைச்சர் மக்தூம் அமின் பாஹிம் ஆகியோரிடையிலான பேச்சுவார்த்தை டில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. இதில் முதற்கட்டமாக இந்திய தொழில் துறைகளில் பாகிஸ்தான் முதலீடுகளை அனுமதிப்பதென கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பாகிஸ்தானிலிருந்து முதலீடுகளை அனுமதிப்பது தொடர்பான கொள்ளை உருவாக்கல் இப்போது ஆரம்ப நிலையில் உள்ளது. இது தொடர்பான அறிக்கை வெகு விரைவில் வெளியாகும்.

இந்தியாவுக்கு பாகிஸ்தானிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் பட்டியலில் உள்ள 30 பொருட்கள் மீதான தடையை விலக்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும். அடுத்த நான்கு மாதங்களில் இவற்றின் மீதான தடை படிப்படியாக விலக்கப்படும் என்றார் சர்மா.




பாகிஸ்தானில் உள்ள வங்கிகள் இந்தியாவில் கிளைகளை தொடங்க ஆர்வமாக உள்ளன. இரு நாடுகளிடையிலான வர்த்தக உறவை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைக்கு பின்னர் அட்டாரி சோதனைச்சாவடிக்கு சென்ற பாஹிம் அங்கு சாலை மார்க்கத்தில் தடையற்ற போக்குவரத்துக்கு வழியேற்படுத்த இரண்டாவது சோதனைச் சாவடியை திறந்து வைத்தார்.

இவ்விழாவில் பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் மக்தூம் அமின், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

(அ-2)

# பாபாவின் முத[illegible]ண்டு நினைவுதின சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடு



புட்டபர்த்தி சாய்பாபாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது ஆச்சிரமத்தில் மூன்று நாட்கள் சிறப்பு வழிபாடுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

உடல் நலக்குறைவு காரணமாக கடந்தாண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி முத்தி அடைந்தார். அவரது சமாதி ஆச்சிரமத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

சாய்பாபாவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையொட்டி ஸ்ரீசத்ய சாய் ஆராதனா மகோத்சவம் என்ற பெயரில் ஆச்சிரமத்தில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றது.

23 ஆம் திகதி முதல் 3 நாட்களுக்கு பஜனைகள், மங்கள ஆரத்தி ஆராதனை, கலாசார நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சாய்பாபா குறித்த புத்தகமும் வெளியிடப்படுகிறது.

உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்றும் ஸ்ரீசத்ய சாய் அறக்கட்டளை தெரிவித்துள்ளது. (அ-2)

# கன்னியாகுமரியில் ஐஸ்கட்டி மழை


(நாகர்கோவில்)

சமீபகாலமாக வெப்பம் அதிகமாகவுள் ளது. இந்நிலையில் நேற்று முன் தினம் பிற்பகலில் குமரி மாவட்டத்தில் பல இடங்களில் மழை பெய்தது. பகல் 2 மணியில் வானில் கருமேகங்கள் திரண்டு காணப்பட்டன.

மாலை 4 மணியளவில் நாகர்கோவில் பூதப்பாண்டி புதுக்கடை நித்திரவிளை உள்ளிட்ட பகுதிகளில் பலத்த இடியுடன் மழை பெய்யத் தொடங்கியது. சுமார் அரை மணி நேரம் இந்த மழை நீடித்தது. புதுக்கடை, முஞ்சிறை, தவிட்டவிளை, வேங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் ஐஸ்கட்டி மழை பெய்தது.

கற்கள் விழுந்தது போல் ஐஸ் கட்டிகள் விழுந்தன. ஓடு வீடுகளின் மீது ஐஸ் கட்டிகள் விழுந்து சத்தம் கேட்டதால் வீட்டில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். சில வீடுகளில் ஓடுகள் லேசாக உடைந்தன. இதேபோல் நித்திரவிளை பகுதியிலும் ஐஸ் கட்டி மழை பெய்தது. (அ-2)

# கண்டம் விட்டு கண்டம் தாக்கி அழிக்கும் அக்னி-5 ஏவுகணை சோதனை அடுத்த வாரம்



(புதுடில்லி)

அக்னி ஏவுகணைகள் இந்திய இராணுவத்தில் உள்ளன. அவை அனைத்தும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. அந்த வரிசையில் தற்போது அக்னி- 5 ஏவுகணையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இது நீண்ட தூரம் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கக்கூடியது.

அதாவது இது 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று இலக்கை குறிபார்த்து சரியாக தாக்கவல்லது. மாபெரும் சக்திவாய்ந்த அக்னி-5 ஏவுகணை சோதனை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிக்குள் நடத்தப்படவுள்ளது. இதை ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன. குறிப்பாக இந்தியாவின் அணு ஆயுத எதிரிகளான சீனா, பாகிஸ்தான் மற்றும் மேற்கத்திய நாடுகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றன.

சமீபத்தில் வடகொரியா விண்ணில் ஏவி தோல்வி அடைந்த ராக்கெட்டிற்கு இந்த நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன. இந்த நிலையில் இந்தியாவின் சக்திவாய்ந்த அக்னி-5 ஏவுகணை உலக நாடுகளை அச்சுறுத்தலில் ஆழ்த்தியுள்ளது. ஏனெனில் கண்டம் விட்டு கண்டம் நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகள் ஐ.நா. பாதுகாப்பு குழுவின் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளது. ஆனால், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமே இந்தியா பயன்படுத்துமே தவிர வேறு நாட்டின் மீது தாக்குதல் நடத்தாது. (அ-2)

## பாரதச் செய்தி

# குஜராத்தில் 4.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

(குஜராத்)

குஜராத் மாநிலம் கட்சி பகுதியில் லேசான நிலநடுக்கம் நேற்றுக் காலை உணரப்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவாகியுள்ளது. குஜராத்தைத் தொடர்ந்து மும்பையிலும் லேசான நில அதிர்வு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் மராட்டியத்தில் உள்ள சதாரா மற்றும் புனே பகுதிகளிலும் லேசான நில அதிர்வு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அங்கு சிறிது நேரம் பெரும் பரபரப்பு நிலவியது.


இந்நிலநடுக்கம் குஜராத், மும்பை மற்றும் வட கர்நாடகா மாநிலத்தில் உள்ள சில மாவட்டங்களிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியா முழுவதும் மக்கள் அச்சத்தில் உள்ளனர். (அ-2)

# ஷாருக்கான் அவமதிப்பு விவகாரம் குறித்து அமெரிக்க தூதரிடம் இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

அமெரிக்க விமான நிலையத்தில் இந்தி நடிகர் ஷாருக்கான் தடுத்து நிறுத்தப்பட்டு அவரிடம் 2 மணி நேரம் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்திய சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஷாருக்கானும் அவரது தாயார் நீடா அம்பானியும் தனியார் விமானத்தில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்கா சென்றனர். நியூயோர்க் விமான நிலையத்தில் இறங்கியதும் இமிக்ரேசன் அதிகாரிகள் நீடாவை அனுப்பிவிட்டு ஷாருக்கானை தடுத்து நிறுத்தினர். அவரிடம் 2 மணி நேரம் தீவிர விசாரணை நடத்தினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.



இது தொடர்பாக டில்லியில் அமெரிக்க தூர்தரை நேரில் வரவழைத்து இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஷாருக்கான் தடுத்து வைக்கப்பட்ட விவகாரத்தை கடுமையாக அணுக முடிவு செய்த இந்தியா தடுத்து நிறுத்துவதும் பின்பு மன்னிப்பு கேட்பதுமே அமெரிக்காவிற்கு வாடிக்கையாகிவிட்டது என்று காட்டமாக கூறியிருந்தது. இதனையடுத்தே டில்லியில் உள்ள அமெரிக்க தலைமை துணைத்தூதர் டொனால்டுலூவுக்கு வெளியுறவுத்துறை சார்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அதை ஏற்று நேரில் ஆஜரான தூதரிடம் ஷாருக்கான் விவகாரத்தில் இந்தியாவின கண்டனத்தை வெளியறவுத்துறை இணைச் செயலாளர் ஜாவீத் அஷரப் தெரிவித்தார். அப்போது ஷாருக்கான் தடுத்து வைக்கப்பட்டதற்கு அமெரிக்க தூதரும் தனது வருத்தத்தை தெரிவித்தார்.

இது குறித்து பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தடுத்து வைப்பதும் பின்பு மன்னிப்பு கேட்டுக் கொள்வதுமே அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது. இது தொடரக்கூடாது என்று கூறியிருந்தார். (அ-2)



தமிழ் புத்தாண்டு சித்திரை திருநாளை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் சாதனையாளர்களுக்கு பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் தமிழ்த்தாய் விருதினை மதுரை தமிழ்ச் சங்கத்துக்கும் ஔவையார் விருதை வை.ஜி.பார்த்தசாரதிக்கும் கபிலர் விருதை முனைவர் மணவாளனுக்கும் உ.வே.சா. விருதை புலவர் ராசுக்கும் முதல்வர் ஜெயலலிதா வழங்கியதைப் படத்தில் காணலாம்.

## ஆஸி-மே.தீவுகள் 2-வது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(டிரினிடாட்)

மேற்கிந்தியத் தீவுகளுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 5 ஒரு நாள் போட்டி, 2 இருபது -20 மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் 5 ஒருநாள் மற்றும் இரண்டு இருபது-20 போட்டிகள் முடிபடைந்துள் ளதுடன், 3 டெஸ்ட் போட்டிகளில் முதல் டெஸ்ட் போட்டி கடந்த 7-ம் திகதி முதல் 11-ம் திகதி வரை பார்படோசில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டு களால் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது டெஸ்ட் இன்று டிரினி டாட்டில் ஆரம்பமாகிறது.

## துளித் துளியாய்...

■ இருபது-20 மற்றும் ஒருநாள் போட்டி களில் சிறப்பாக செயற்பட்டாலும், டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவர் தோனியின் செயல்பாடு அத்தனை புத்திசாலித்தனமாக இல்லை என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் கூறியுள்ளார்.

■ பாகிஸ்தான் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் அஸார் முகமட் தற்போது இங் கிலாந்து குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருகின்றார். கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக் காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அவர், இந் தியா வருவதற்கான விசா வழங்கப்பட் டுள் ளதை அடுத்து விரைவில் பஞ்சாப் அணியுடன் இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

■ ஐந்தாவது ஐ.பி.எல் தொடர் இருபது- 20 போட்டிகளை இணையத்தில் பார்க்கும் ரசிகர்களின் எண்ணிக்கை 56 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டிகளை தொலைக்காட்சி யில் பார்க்கும் பார்வையாளர்களின் எண் ணிக்கை குறைந்து வருவதாக வருத்தப் படுகின்றனர் நிர்வாகிகள். ஆனால் இணையத் தில் பார்ப்பவர்களின் எண்ணிக்கை, சரிபாதிக் கும் மேலாக அதாவது 56 சதவீதமாக உயர்ந் துள்ளது பெரும் வியப்பாக உள்ளது.

இது குறித்து கூகிள் இந்தியாவின் மீடியா சேல்ஸ் தலைவர் பிரவீண் சர்மா கூறுகையில், ஐ.பி.எல் போட்டிகளை இணையத்தில் பார்ப் பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிக ரித் து வருகின்றது. இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகின்றது என்றார்.

# சென்னையை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தியது புனே வாரியர்ஸ் அணி

ஐ.பி.எல். போட்டித் தொடரின் 16-வது லீக் ஆட்டம் புனேயில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணி யும் மோதின.


இப்போட்டி புனேயில் உள்ள சுப்ரதராய் சகாரா மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப் பெடுத்தாட முடிபு செய்தது.

அதன்படி அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முரளி விஜயும்,டு பிளசீஸும் களமிறங்கி நிதானமாக ஆடினர்.

எனினும் முரளி விஜய் வழக்கம் போல 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான டு பிளசீஸ் 33 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2




சிக்ஸர்களுடன் 43 ஓட்டங்களையும், சுரேஸ் ரெய்னா 20 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்பு களமிறங்கிய அணித் தலைவர் தோனி 26 ஓட்டங்களும், ரவீந்திர ஜடேஜா 26 பந்துகளில் 4 பவுண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்களை எடுத்தது.

ட்வெயின். பிராவோ 5 ஓட்டங்களுடனும், அல்பி மோர்கல் 3 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து 156 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் புனே வாரியர்ஸ் அணி துடுப்பெடுத்தாட களமிறங்கியது.





புனே வாரியர்ஸ் சார்பில் உத்தப்பா 10 ஓட்டங்களுடனும் கங்குலி 16 ஓட்டங்களுடனும் ரன் அவுட் ஆகினாலும்,

ஜெசி ரைடரின் அதிரடியால் புனே வாரியர்ஸ் அணி 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

56 பந்துகளுக்கு முகங்கொடுத்து ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் உட்பட 73 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்ற ஜெசி ரைடர் இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்.

**இன்றைய ஐ.பீ.எல். போட்டிகள்:**
மாலை 4 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் எதிர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகளும், இரவு 8 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில் பெங்களூர் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளும் மோதுகின்றன.



கோபன்கேகனில் நடக்கும் தானிஷ் ஓபன் டென்னிஸ் தொடர் காலிறுதியில் ஜெர்மனியின் கெர்பர் வெற்றி பெற்றார்.

## உலகின் சிறந்த வீரராக தெரிவானமை மகிழ்ச்சியளிக்கிறது - சங்கக்கார



உலகின் முதல் நிலை கிரிக்கெட் வீரராக விஸ்டன் சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட் டமை குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரராக வும், 2011 ஆம் ஆண்டிற்கான விஸ்டன் கிரிக் கெட் வீரர்களில் ஒருவராகவும் விஸ்டன் சஞ்சி கையால் குமார் சங்கக்கார அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த இரண்டு கௌரவங்களையும் ஒரே தடைவையில் பெற்ற முதலாவது கிரிக்கெட் வீரராக குமார் சங்கக்கார காணப்படுகின்றார்.

இது மிகப் பெரும் கௌரவம் எனத் தெரி வித்த சங்கக்கார, இக் கௌரவத்தினை பெருமையாகவும் பணிவாகவும் உணர்வதா கவும் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு தனக்கு சிறந்த ஆண் டாக அமைந்ததாகத் தெரிவித்த அவர், தான் ஓய்வு பெறுவதற்கு முன்னர் இன்னும் சிறந்த வருடங்கள் அமையப்பெறும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

கிரிக்கெட் விளையாட ஆரம்பிக்கும் போது தான் இயற்கையாக விக்கெட் காப் பாளராக இருந்திருக்கவில்லை எனத் தெரி வித்த சங்கக்கார, அனுபவஸ்தர்களிடம் அது பற்றிக் கலந்துரையாடியதாகத் தெரிவித்தார்.

எனினும் ஏராளமான விக்கெட் காப்புப் பயிற்றுவிப்பாளர்களிடம் கலந்துரையாடிய வேளையில் அவர்கள் மேலும் தன்னை குழப்பத்தில் ஆழ்த்தியதாகவும், தான் பெரி தாக கற்றுக்கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்தார்.

எனினும் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் இயன் ஹீலியைச் சந்தித்தபோது மாபெரும் மாற் றத்தை உணர்ந்ததாகத் தெரிவித்த அவர், விக்கெட் காப்புப் பணியை இலகுபடுத்தி, தான் விளங்கிக் கொள்ளும் விதத்தில் அவர் பயிற்றுவித்ததாகத் தெரிவித்தார்.

அரவிந்த டீ சில்வா, ரசல் ஆர்னோல்ட், ஹசான் திலகரட்ண ஆகியோர் தான் முதலில் சந்தித்த இலங்கையின் முன்னணி கிரிக்கெட் வீரர்கள் எனத் தெரிவித்த சங்கக்கார, தற் போதைய இளம் கிரிக்கெட வீரர்கள் ஆரம் பத்திலிருந்து கிரிக்கெட்டை கற்று வருவதா கவும், அவர்கள் கிரிக்கெட்டை மகிழ்ச்சியாக ஆடக் கற்றுக் கொள்வது முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

## யுவராஜ் சிங்கை சந்தித்தது எனது அதிர்ஷ்டம் -பீற்றர்சன்



புற்றுநோய் சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய இந்திய வீரர் யுவ ராஜ் சிங்கை இங்கிலாந்து நட்சத் திர வீரர் கெவின் பீற்றர்சன் சந்தி த்து நலன் விசாரித்துள்ளார்.

யுவராஜ் சிங்கிற்கு, கடந்த ஆண்டு புற்றுநோய் கட்டி ஏற்பட் டதை அடுத்து அமெரிக்காவில் மூன்று கட்ட கீமோ தெரபி சிகிச்சை முடித்து கடந்த 9 ஆம் திகதி இந் தியா வந்து சேர்ந்த அவர் தற் போது ஓய்வெடுத்து வருகின்றார்.

இந்நிலையில் ஐ.பி.எல் தொட ரில் டில்லி டேர்டேவில்ஸ் அணியில் விளையாடி வரும் இங் கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன், யுவராஜ் சிங்கை சந்தித்து நலம் விசாரித்தார்.

இருவரின் சந்திப்பு குறித்து பீற்றர்சன் டுவிட்டர் இணையத்தளத்தில் கூறியதாவது, யுவராஜ் சிங்கை நேரில் சந்தித்து அவருடன் பேசியதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் கடந்த வாரம் பீற்றர்சன் வெளியிட்ட செய்தியில் அவர் கூறியிருந்ததாவது, லண்டனில் இருந்து யுவராஜ் சிங் இந்தியா செல்லும் முன் சந்தித்து அவருடன் பேசியதை அதிர்ஷ்டமாக கருதுகின்றேன். இந்தவாரம் அவரை நேரில் சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளேன்.

ஒரு விளையாட்டு வீரரின் இக்கட்டான சூழ்நிலையில் அவரை நேரில் சந்தித்து ஆறுதல் அளிப்பது விளையாட்டு வீரரான எனது கடமையாக நினைக்கின்றேன் என்று தெரி வித்திருந்தார்.

கடந்த 2008-ல் இந்தியாவில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்து நாடுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் கலந்து கொண்ட கெவின் பீற்றர்சனுக்கு, யுவராஜ் சிங்குடன் நட்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது...

இந்தியாவிற்கான தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இலங்கை தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கப் பெறுமானால் அது இலங்கையரின் விருப்பத்துக்கு அமையவே நிகழ வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

13வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை அடிப்படையாக கொண்ட அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும். இலங்கை வாழ் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலே ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் செயற்படுகின்றது.

இந் நிலைப்பாட்டை ஏனைய கட்சிகளும் கொண்டிருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தியை ரணில் விக்கிரமசிங்க சந்தித்த போது சோனியா காந்தியின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் இருந்ததாகவும் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)





தங்காலை, கால்டன் இல்[லத்]தில் ஜனாதிபதி மகிந்த ரா[ஜப]க்ஷ தனது குடும்பத்தாருட[ன்] தமிழ், சிங்கள புத்தாண்டை கொண்டாடினார்.

ஜனாதிபதி குடும்பத்தா[ர்] கலாசார முறைப்படி வீட்டில் ப[ால்] பொங்க வைத்து, உறவினர்க[ள்] நண்பர்களுடன் பாற்சோ[று] பலகாரங்களைப் பரிமா[றி] கொள்வதை படங்களில் கா[ண]லாம்.

## இடியுடன்...

கூடிய மழை பெய்யும்.

இதேவேளை பிற்பகல் அல்லது வேளைகளில் நாட்டின் அநேகமான [பகுதி]களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் என வானிலை அவதான நிலைய அ[திகாரி] கே.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் க[டல்] கொந்தளிப்பாக காணப்படும் என அவதான நிலையம் வெளியிட்டு[ள்ள அறிக்]கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பு-தூத்துக்குடி கப்...

பொறுப்புக்கழகம் அறிவித்தது.

கப்பல் இயக்குவதற்கு பிளமிங்கோ லயன்ஸ் என்ற ஷிப்பிங் காப்பரேசன் நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது. ஆனால் இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் எதுவும் நடைபெற வில்லை.

மேலும் இலங்கைக்கு செல்ல வேண்டும் என்றால் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் முன்கூட்டியே விசா பெற வேண்டும் என்ற நிலை கடந்த ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் கப்பலில் செல்ல மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகின்றது. சிறிய கப்பல் இயக்கப்படும் என்ற அறிவிப்புக்கு பிறகு இலங்கை செல்ல இதுவரை யாருமே முன்பதிவு செய்ய வில்லை.

இதன் காரணமாக திட்டமிட்டபடி ஏப்ரல் 19 ஆம் திகதி கொழும்பு-தூத்துக்குடிக்கு இடையேயான கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதில் தாமதம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஒரே வீட்டில் ஒரே இர...

இச்சம்பவத்துக்கு அவர்களிடையே இடம் பெற்ற கருத்து மோதலே காரணம் என பெற்றோர் கூறுகின்றனர்.

இது குறித்து பெற்றோர் தெரிவித்ததாவது,

நேற்று முன்தினம் மாலை இச் சகோதரிகளுக்கிடையில் கருத்து மோதல் இடம் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து மூத்த சகோதரி அறையினுள் சென்று விட்டார். பின்னர் 7.30 மணியளவில் அவ் அறைக்குச் சென்ற போது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அவரது சடலத்தை உறவினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் மற்றைய சகோதரி இரவு 7.45 மணியளவில் கிணற்றுக்குள் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வைத்தியசாலையில் இருந்து [வீடு] திரும்பியவர்களால் இவரது சடலம் [கிணற்றி]னுள் இருந்து மீட்கப்பட்டதாக தெ[ரிவிக்கப்]பட்டது. இச் சகோதரிகளின் தற்கொலை குடாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்[தியுள்ளது].

இரண்டு சகோதரிகளும் நீண்[ட] வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவு[ம் அதன்] விளைவாகவே இருவரும் தற்கொலை[யை செய்து] கொண்டிருக்கக்கூடும் எனவும் [பொலிஸ்] தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ்.குடாநாட்[டில் தற்]கொலைகள் திடீரென அதிகரித்து[ள்ளதாக] எச்சரிக்கப்பட்டுள்ளது.

இவற்றினைக் கட்டுப்படுத்த விழி[ப்புணர்வு]களும், போதனைகளும் அவசியம் [என] ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இம் மாதத்தில் மட்டும் 8 பெண்[கள் இவ்]வாறு உயிரிழந்துள்ளதாக பொலி[ஸார் தெரி]வித்தனர்.

## [த]மிழர்களை திருப்பி...

[ம]னித உரிமைகள் ஆணையாளரின் பணி[ய]கத்தால் வெளியிடப்படவுள்ள அறிக்கையை தொடர்ந்தே இவ்விவகாரம் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுப்பது என இந்நாடுகள் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்ததை அடுத்து இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதை ஐரோப்பிய நாடுகள் குறைந்திருந்ததுடன், புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை திருப்பு அனுப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தன.

இவ்வாறு புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை திருப்பி அனுப்புவதில் பிரித்தானியா மற்றும் சுவிஸ் ஆகிய நாடுகள் தீவிரமாக செயற்பட்டிருந்தன.

இதனை சர்வதேச மனிதவுரிமைகள் அமைப்புகள் வன்மையாகக் கண்டித்திருந்த போதிலும், ஐரோப்பிய நாடுகள் அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை திருப்பி அனுப்புவதில் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வந்தன.

இந் நிலையில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஐரோப்பிய நாடுகளின் இம் முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ஒரு வருடகாலத்துக்கு ஒத்திவைக்க சுவிஸ் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் சுவிஸ் அரசின் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஐரோப்பாவின் வேறு பல அரசுகளும் தீர்மானித்துள்ளதாக தெரிகின்றது.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை அடுத்த ஆண்டு வெளியிடப்பட்டதன் பின்னரே இவ் விவகாரம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (எ-11)

## இராஜதந்திர ரீதியில்...

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதே பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கான நோக்கம் எனக் கூறப்பட்ட போதிலும், இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இராஜதந்திர விரிசலை சமப்படுத்துவதற்காகவே அவர் இந்தியா செல்லவுள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்விஜயத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் தொடர்பிலும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன். இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் மத்திய அரசின் முக்கியமான அமைச்சர்கள் சிலரையும் இவர் சந்திக்கவுள்ளதாக கூறப்படுகின்றது. அதே வேளை இந்திய வர்த்தக மற்றும் முத[லீட்டாள]களுடனும் இவர் பேச்சுவார்த்தை நடத்த[வுள்ளார்].

இந்தியாவில் இருந்து ஐயாயிரத்[து ...] மில்லியன் டொலர் பெறுமதியான [பொருட்]களை கடந்த ஆண்டு இறக்குமதி செய்[த போதி]லும், இந்தியா இலங்கையில் இருந்[து ...] மில்லியன் டொலர் பெறுமதியான [பொருட்]களை மட்டுமே இறக்குமதி செய்திருந்[தது].

இந்நிலையில், இலங்கையில் [இருந்து] இந்தியாவுக்கான ஏற்றுமதிகளை அ[திகரிக்]கும் நோக்குடன் இவர் அந்நாட்டின் வ[ர்த்தகத்] துறையினருடன் பேச்சுவார்த்தை நட[த்தவுள்]ளார்.

இலங்கையில் போர் இடம்பெற்ற [காலத்தில்] இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான [உறவு] நிலையை சீராகப் பேணுவதற்காக [இரு] நாடுகளிலும் விசேட குழுக்கள் அமை[க்கப்] பட்டிருந்தன. இதன்போது இலங்கை [அர]சாங்கத்தின் தரப்பில் பசில் ராஜபக்ஷ [முக்கிய] பங்கு வகித்திருந்தார்.

போர் முடிபடைந்த பின்னரும் [இக்] குழுவினருக்கும் இடையே நெரு[ங்கிய] தொடர்புகள் பேணப்பட்டு வந்த போ[திலும்] ஜெனிவா தீர்மானத்துக்கு இந்தியா [ஆதரவு] தெரிவித்ததன் பின்னர் இந்தக் குழுக்[களுக்கு] இடையிலான தொடர்பாடல்கள் செய[லிழந்த] நிலைக்குச் சென்றிருந்தமை குறிப்[பிடத்த]கது.

வின்றிச்
10 வரப்பிரசாதங்களுடன்
ஐஸ்கிறீம் இயந்திரம்
50,000/- மேல்
மாத வருமானம்
• சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
• இலவச பயிற்சி
• விற்பனையின் பின் சேவை
ஒரு வருட உத்தரவாதம்
விலை ரூ 99,000/- இல் இருந்து
புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

வெளிநாடு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு!
மாதாந்த கொடுப்பனவு முறையில் விமானக் கட்டணங்களை யாழ் நகரிலும் செலுத்தலாம்
For monthly Installment
HNB
Special Offer for Credit Card holders!

| | | |
|---|---|---|
| கொழும்பு | -சென்னை | 1,600/=Rtn |
| கொழும்பு | -திருச்சி | 1,450/=Rtn |
| கொழும்பு | -மாலைதீவு | 2 ,600/=Rtn |
| கொழும்பு | -சிங்கப்பூர் | 3,000/=Rtn |
| கொழும்பு | -மலேசியா | 3,350/=Rtn |
| கொழும்பு | -லண்டன் | 4,550/=Ow |
| கொழும்பு | -பிரான்ஸ் | 7,550/=Rtn |
| கொழும்பு | -ஜேர்மனி | 9,650/=Rtn |
| கொழும்பு | -கனடா | 14,600/=Rtn |

Prices are subject to change without prior notice.
NATION POPULAR TRAVELS & TOURS
Head office #16 ½, E.S. Fernando Mawatha, Colombo – 06
Tel : +94 114 65 11 99 Fax :+94 114 50 55 32
VISA
#82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம்
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
Hotline: 0214 920 920
www.nationtravels.com

Excavator விற்பனை
HITACHI 80, IHI 30 ஆகிய
EXCAVATORS விற்ப[னைக்]
குண்டு. சனி, ஞாயிறு
தினங்களில் பார்வையிடலா[ம்]
விபரங்களுக்கு:-
0777 2668[...]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2012 இல் அச்சிட்டு வெளியிட[ப்பட்டது].